பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 22 வெள்ளிக்கிழமை (06-07-2001) தொலைபேசி: 3378 ஒலி: 2?7

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலரீஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.
[கி-2127]

### பாலியல் வல்லுறவை கண்டித்து

# இன்று பூரண ஹர்த்தால்! பொது அமைப்புகள் ஆதரவு!

தமிழ்ப்பெண்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டுவரும் மிருகத்தனமான பாலியல்வல்லுறவுச்சம்பவங்கள், மற்றும் சித்திரவதைச் சம்பவங்களுக்குஎதிர்ப்பு தெரிவித்து இன்று யாழ் குடாநாடு தழுவிய பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது. பத்து தமிழ்க் கட்சிகளினால் மேற்கொள்ளப்படவுள்ள இன்றைய ஹர்த்தாலுக்கு. மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம்,யாழ் கத்தோலிக்க மறைமாவட்டக்குழு ,யாழ் மாவட்ட அரசசார்பற்றநிறுவனங்களின் ஒன்றியம், தமிழர் விடுதலைக்கூட்டணி, அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ், ரெலோ, புளொட், ஈ பி ஆர்:எல்.எவ் [சுரேஸ் அணி] ஈ.பி.ஆர்.எல் எவ். [8 ஆம் பக்கம் பார்க்க ]

## விமானத் தாக்குதல்
## பிரிட்டிஷ் அரசு கவலை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களைத் தவிர்ப்பதற்கென இலங்கையரசுவடபகுதி மீது விமானத்தாக்குதல்களை மேற்கொள்வது பிரித்தானிய அரசுக்கு கவலை அளிக்கிறதென்று பிரிட்டிஸ் தூதரகப் பேச்சாளர்தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில் வடபகுதிமீதான வான் தாக்குதல்கள் மீண்டும் யுத்த நிலைமையே தோற்றுவித்துள்ளது.இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இதனைத் தவிர்க்கவும் சமாதானத்தை ஏற்படுத்தவும் உடனடியாக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

இதேவேளை இராணுவநடவடிக்கை மூலம் தீர்வொன்றைக் கண்டுவிட முடியாதென்றும் தூதரகப் பேச்சாளர் கூறியுள்ளார். [இ]

## விமானத் தாக்குதல்
## இறைமை அரசின் உரிமை
### அமைச்சர் கதிர்காமர்

(கொழும்பு)

யாழ் குடாடாநாட்டில் நடத்தப் பட்ட விமானக் குண்டு வீச்சுக்கள், சமாதான நடவடிக்கைகளுக்கு இடையூறானவையல்ல வென்று. வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்

விமானக் குண்டு தாக்குதல்கள் சமாதான முயற்சியில் நிரந்தரக் தாக்கத்தை ஏற்படுத்தாது. இவை தற்காப்புக்காக மேற்கொள்ளப்பட்டவை. இது இறைமையுள்ள அரசின் உரிமையென்று அமைச்சர் கதிர்காமர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ்
# புலிகள் மீதான தடை
# தொடர்ந்தும் நீடிப்பு!

## விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது

(நமது நிருபர்)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தி, தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை மேலும் நீடிப்பது தொடர்பான புதிய பிரமாணம் ஒன்றை விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நேற்று வெளியிட்டுள்ளார்.

பொதுபாதுகாப்புக்கட்டளைச் சட்டத்திற்கு அமைய; நாட்டின் சகல நிர்வாக மாவட்டங்களும் பாதுகாப்புப் பிரதேசங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதுடன், அத்தியாவசிய சேவைகளைத் தங்குதடையின்றி மேற்கொள்வதற்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவசரகால நீடிப்புப் பிரேரணையை பாராளுமறத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்கு போதிய பெரும்பான்மை கிடைக்காமல் போகலாம் என்பதைக் கருத்தில் கொண்டு தனது விசேட அதிகாரங்களைப் பயன் படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் நீடிப்பது தொடர்பான புதிய பிரமாணம் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிட்டுள்ளார்.

கடந்தயூன்மாதம் பாராளுமன்றம் அங்கீகரித்துள்ள அவசரகால நிலைமை நீடிப்பு இம்மாதம் 3ம்திகதி நள்ளிரவுடன் காலாவதியாகியுள்ளதால் இந்த உத்தரவை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.

நாட்டின்தற்போதையபாதுகாப்புநிலவரத்தைக் கருத்தில் கொண்டு 1979ம் ஆண்டின் 48வது இலக்க பயங்கரவாதத் தடை தற்காலிக ஏற்பாடுகள் சட்டத்தின் 27வது பிரிவின் பிரகாரம்விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்ந்தும் தடை செய்யப் பட்டிருக்கும்.

பொது மக்கள்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்நாடடின்சகல நிர்வாக மாவட்டங்களும் பாதுகாப்புப் பிரதேசங்க (8-ம் பக்கம் பார்க்க)

## ரணிலை ஆட்சி அமைக்குமாறு ஜனாதிபதி அழைக்கமாட்டார்
### பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுமீது ஐக்கியதேசியக் கட்சி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் வெற்றி பெற்றாலும் ரணில் விக்கிரமசிங்காவை ஆட்சிஅமைக்க ஜனாதிபதி சந்திகா அழைக்கமாட்டார் என பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

சிரச தொலைக்காட்சிக்கு பிரதமர் ரட்ணசிறிவிக்கிரம நாயக்கா அளித்தபேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு நிபந்தனைகளை (8-ம் பக்கம் பார்க்க)

## திவ்வியனை விடுவிக்ககோரி யாழ். பல்கலைக்கழக நுழைவாயில் பூட்டப்பட்டது

[யாழ்ப்பாணம்]

படையினரால் யாழ்பல்கலைக்கழக விஞ்ஞான பீடமாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் கைதுசெய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், உடனடியாக அவரைவிடுதலை செய்யக்கோரியும் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று இரண்டாவதுநாளாகவும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

பகிஷ்கரிப்பினால்பல்கலைக்கழக நுழைவாயில்கள் எவரும் நுழைய முடியாதவாறு பூட்டப்பட்டிருந்தன.

பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்கள் 'பேனா ஏந்தும் கைகளில் அயுதம் ஏந்தவைக் (8ம் பக்கம் பார்க்க)

# திவ்வியனை விடுதலைசெய்யாவிடின் பல்கலை நிர்வாகம் முடக்கப்படும்
### மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணபல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவனும், மாணவர் ஒன்றிய முன்னாள் செயலாளருமான கிருஷ்ண-சாமி திவ்வியனை படையினர் விடுவிக்கும் வரை தமது பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடருமென்றும் பல்கலைக்கழக நிர்வாகம் முடக்கப்படும் என்றும் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கப்பட்டிருப்தாவது.

கைது செய்யப்பட்ட மாணவன் திவ்வியன் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளராக இருந்த காலத்தில், அரசு குடாநாட்டிலும் வெளியேயும் மேற்கொண்ட மனித உரிமைமீறல் சம்பவங்களுக்கு கடும் எதிர்ப்புகாட்டிச் செயற்பட்டு வந்தார். இதனால் இராணுவம் அவருக்கு அச்சுறுத்தல் விடுத்ததுடன் கைதுசெய்யவும் முயற்சித்தது. இதனாலேயே கடந்த 2ந் திகதி படையினர் உறவினர் வீட்டுக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த அவரைக் கைதுசெய்தனர்.

இவ்வாறான கைதுகளும் தாக்குதல்களும் பல்கலைக்கழக மாணவர்கள் மீது தொடர்வது மாணவர்களை விசனத்தில் ஆழ்த்தியுள்ளது.

கைதுசெய்யபபட்ட திவ்வியனை உடன் விடுதலை [8-ம் பக்கம் பார்க்க]

## நாடுதழுவிய போராட்டத்திற்கு மக்களை தயாராகுமாறு
### ரணில் அழைப்பு

(கொழும்பு)

அரசு பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதற்கு முன் வருமானால் அதற்கெதிராக நாடுதழுவியரீதியில் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு மக்கள் அனைவரையும் தயாராகுமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் எம பிக்கள்,மற்றும் கட்சியின் முக்கிய தலைவர்களுக்கான கூட்டம் நேற்று சிறிகோத்தாவில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே ரணில மேற்கண்டவாறு கூறினார், இக்கூட்டத்தில் அவர் (8-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில்சுற்றிவளைப்பு 134இளைஞர்யுவதிகள்கைது

(கொழும்பு)

கரும்புலிகள் தினத்தை ஒட்டி கொழும்பில் பல்வேறு பகுதிகளில் படையினர் மேற்கொண்ட பாரிய சுற்றிவளைப்பு தேடுதல்களில் 134 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட இத்தேடுதல்களில், கொழும்பு வடக்குப் பகுதியில் 72 இளைஞர்களும் 20 யுவதிகளும். கொழுமபு தெற்குப் பகுதியில் 42இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டதாக பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி [8 ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்;

## திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

புல்லாவெளி புனித செபஸ்ரியார் ஆலய திருநாளை முன்னிட்டு மாகியம்பதி புனித செபஸ்ரியார் ஆலயத்தில், 7, ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணை ஊர்வலமும் 8 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை காலை 7 30 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறவுள்ளன (செ–7)

## நாளை கருத்தரங்கு

(இணுவில்)

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் நாளை சனிக்கிழமை மு ப. 11. 30 மணிக்கு நடைபெறவுள்ள கருத்தரங்கில் டாக்டர் வெ. சகதிவேல "மூலிகைகளும் இரசாயனப் பகுப்பு ஆய்வுகளும்" என்னும் தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்.

அதிபர் க. செல்வக்குமரன் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது. (செ-49)

வடக்கு- கிழக்கில்

# இன்றைய ஹர்த்தால் நடவடிக்கைக்கு சகலரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்

### மாவை எம்.பி. வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பெண்கள் மீதான தொடர்ச்சியான பாலியல் வன்முறையைக் கண்டித்து இன்று வடக்கு- கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்படவுள்ள ஹர்த்தல் நடவடிக்கைக்கு சகலரும்பூரண ஒத்துழைப்பை நல்குமாறு வேண்டுகின்றோம.

தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவ்வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

தமிழ்ப் பெண்களுக்கெதிரான இக்கொடிய பாலியல் வன்முறைக் கலாசாரத்தைத் தடுத்து நிறுத்தவும், தமிழ்ப் பெண் தலத்திற்குப் பாதுகாப்பு வழங்கவும் இன்றைய அரசு தவறிவிட்டது.

இவ்வரசின் காவலர்களின் பாலியல் வல்லுறவுக் கலாசாரத்திற்கு இறுதியில் பலியாக்கப்பட்டவள் தான் மலையகத்துத்தமிழ்ப்பெண். ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் இக்கலாசாரம் வரும் வரை காத்திருக்க வேண்டாம்?

எனவே தான் தமிழர் விடுதலைக்கூட்டணி உட்பட பத்துக்கும் மேற்பட்ட தமிழ் முஸ்லிம் அமைப்புக்கள் இன்றைய தினத்தை, காவலர்களின் பாலியல் வல்லுறவு சித்திரவதைக் கொடுமைகளுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் எதிரான நாளாகப் பிரகடனப்படுத்தியுள்ளன.

கைதடி மாணவி கிருஷாந்தி குமாரசாமி செம்மணியில் இராணுவத்தினால் கற்பழிக்கப்பட்டாள் அவர் குடும்பத்தையே கொன்று செம்மணியில் புதைத்து விட்டனர். அவ்வாறே கோண்டாவிலில் ரஜனி அம்பாறை சென்றல் காம்ப் கோணேஸ்வரி, புங்குடுதீவில் சாரதாம்பாள், மன்னாரில் கமலிட்டா மற்றும் மன்னார், உப்புக்குளத்தில் சிவமணி விஜிகலா நீர்கொழும்பில் பம்பலப்பிட்டியில் பாலியல் சித்திரவதைகள் என்று பட்டியல் நீண்டு வருகின்றது.

அவசர காலச் சட்டங்களையும் சட்டத்தின் ஓட்டைகளையும் பயன்படுத்தி இக்காமுகக் காவலர்கள் சட்டத்தின் பிடியிலிருந்தும் தப்பித்துக்கொள்கின்றனர்

தமிழ்ப் பெண்களின் கற்பையும் மானத்தையும், வாழ்வையும், உயிரையும் கூடப் பறிக்கின்ற இக்கயவர்களுக்கு அவசர காலச் சட்டங்களும் அரசும் பாதுகாப்பாக இருக்க முடியுமா?

(க)

## மாகாண மட்ட எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்தில் அண்மையில் நடத்தப்பட்ட தமிழ்மொழித் தினப் போட்டியின் எழுத்தாக்கப்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு.

**பிரிவு 1:- ஆக்கம்-எழுத்து**

1 ஆம் இடம் செல்வி முத்துக்குமார் மெடோனா ஆன்சியா யா/ புனித ஜேம்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்

2 ஆம் இடம் செல்வி ஜெ. நிதுஷினி மட்டு/ கல்லடி முகத்துவாரம் விபு. வித்தியாலயம்

3 ஆம் இடம் செல்வி த நிலாஜினி தி/ பேராறு பரமேஸ்வரா வித்தியாலயம்

**பிரிவு-2 ஆக்கம்:-கட்டுரை கடிதம**

1 ஆம் இடம் செல்வி சிவலிங்கம தடசாயினி மு/ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்

2ஆம இடம் செல்வி ரமேஸ் பிரஷாந்தி வ/ சைவப்பிரகாச மகளிர் வித்தியாலயம்

3 ஆம் இடம் செல்வி க. மாதங்கி யா /வேம்படி மகளிர் கல்லூரி

**பிரிவு 3–ஆக்கம்- கட்டுரை கடிதம்**

1ஆம் இடம் செல்வி ஸ்ரீவரதன் சுகிர்தா யா/வேம்படி மகளிர் கல்லூரி

2 ஆம் இடம் செல்வன் சரண்ராஜ் மன்/சித்திவிநாயகர் இ.தே பா

3 ஆம் இடம் செல்வி பாத்திமா பொபினாஸ் அக்/ அல்-இர்பான் வித்தியாலயம்

**பிரிவு 4 ஆக்கம்: கட்டுரை சுருக்கம் கவிதைநயத்தல்**

1 ஆம இடம செல்வி சி. சாலினி யா/வேம்படி மகளிர் கல்லூரி

2 ஆம் இடம் செல்வி உ. உஷ்வர்த்தனி தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி

3 ஆம் இடம் செல்வன் ரி. சித்திக் மட்/ஒட்டமாவடி தே.பா

**பிரிவு 5 ஆக்கம்:- கட்டுரை திறனாய்வு கடின உரைநடை**

1ஆம இடம செல்வன எம். எம் சர் உறரன் அக்/அக்கரைப்பற்று மு ம: கல்லூரி

2 ஆம இடம் செல்வி ஜ நிரேஜினி மட்/மண்டூர் ம வித்தியாலயம்

3 ஆம் இடம் செல்வி க:சிவதாரணி யா /மெதடிஸ்த பெ. உ பா

**பிரிவு தி-போ ஆக்கம் குறு நாடகம்**

1 ஆம் இடம் செல்வி அன்ரன் செல்வக்குமார் விண்டா யா–திருக்குடும்பக் கன்னியர் மடம்

2 ஆம் இடம் செல்வன் அ. கவீந்திரன் கமு- இ கி. மி மத்திய வித்தியாலயம்

3 ஆம் இடம் செல்வன் பூ. புனிதரன் மட்-குருமண்வெளி சிவசக்தி ம வி

**பிரிவு 4 ஆக்கம் கவிதை**

1 ஆம் இடம செல்வி சஎனிடா மன்-புனித சவேரியார் பெ.தே. பாடசாலை

2 ஆம் இடம் செல்வி ஆ மதுரா யா-வசாவிளான் மத்திய ம வித்தியாலயம்

3 ஆம் இடம் செல்வி சு. சியாமளா வ-சைவப்பிரகாச மகளிர் கல்லூரி

**பிரிவு 5 ஆக்கம் கவிதை**

1 ஆம் இடம் செல்வன்தெட்சிணாமூர்த்தி அகிலன் கிளி/ கிளிநொச்சி ம.கல்லூரி

2 ஆம் இடம் செல்வன் க.கோகுலதாஸ் வ/தமிழ் மத்திய வித்தியாலயம்

3 ஆம் இடம் செல்வன் கு மு. பாலமீத்கான் தி/ அல். தாரிக் ம. வித்தியாலயம்

**பிரிவு 4 ஆக்கம் சிறுகதை**

1 ஆம் இடம் செல்வி. ஸ்ரீதரன் அம்பிகா யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

2 ஆம் இடம் செல்வி கு: சிவசங்கரி தி/ செல்வநாயகபுரம் த. ம. வி

3 ஆம் இடம் செல்வி மு. ஹ. ஹஸ்னிபா மட்/மீராபாலிகா ம. வித்தியாலயம்

**பிரிவு 5 ஆக்கம் சிறுகதை**

1 ஆம் இடம் செல்வன் இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா யா/ இந்துக்கல்லூரி

2 ஆம் இடம் செல்வி சுரேகா தவராஜா கிளி/ பூநகரி ம: வித்தியாலயம்

3 ஆம்இடம் செல்வி ஜனனி ஜெயராம தி/புனித மரியாள் கல்லூரி

**பிரிவு விசேட பிரிவு ஆக்கம் தமிழ் எழுத்து/ சிங்கள மாணவர்**

1 ஆம் இடம் செல்வன் சருரங்க நிலான்வத்தேகம தி/ நாலந்த ம. வித்தியாலயம்

2 ஆம் இடம்; செல்வி மதுஷிககா பிரியகர்ஷினி பீரிஸ் வ/பரகும் ம வித்தியாலயம்

**பிரிவு விசேட பிரிவு ஆக்கம் தமிழ் எழுத்து/சிங்கள மாணவர்**

1 ஆம் இடம் செல்வி ரெஷானி தரிந்தா தி/திஸ்ஸ ம. வித்தியாலயம்

2 ஆம் இடம் செல்வன் தரிந்து ருவன்குமார வ/ பரகும் மகா வித்தியாலயம்

[உ–7]

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும்

# விடுதலைப் புலிகளின் முயற்சியை விமானப்படை முறியடித்துள்ளதாம்

### லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான தீவிர முயற்சிகளில்இறங்கிவந்தமைஇரகசியத் தகவல்கள் மூலம் பெறப்பட்டதன் பேரில்,

விமானப்படையினர் புலிகளின் முக்கிய இலக்குகள் மீது தாக்குதல்நடத்தி அத்திட்டத்தை முறியடித்து விட்டனரென இலங்கை வெளிநவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

கதிர்காமர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகளின் இலக்குகள் நோக்கி விமானப்படையினர் மேற்கொள்ளும் தாக்குதல்களால் சமாதான முயற்சிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது

இத்தாக்குதல்கள் தேசிய பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டே நடத்தப்படுகின்றன மாறாக அரசியல் தீர்மானங்களின் அடிப்படையில் அல்ல என்றும்,

சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலமே யுத்தத்திற்குத் தீர்வு காணமுடியும்: இதற்குப் புலிகள் ஒத்துழைக்க வேண்டும்.

யுத்தம் என்ற பெயரில் மக்களை அழிக்க நினைப்பதுமடமைத்தனம் என்றும் தெரிவித்தார்

இதேவேளை,

தமது நிலைகள் மீது தொடரும் அரசின் விமான மிருங்கித் தாக்குதல்கள் சமாதான முயற்சிகளைப் பாதிக்குமென புலிகளின் வன்னித் தலைமையகம்விடுத்த அறிக்கையொன்றில் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-7)

---

**யாழ். அ. ம. தி...**

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரலாறு, மிழ்ப்பணிகளை தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் நன்றியோடு நினைவு கூரும். ஆயர்களான யூலஸ் எமிலியானுஸ்பிள்ளை, அருட்திரு தோமஸ்போன்ற அ.ம.திகள் கத்தோலிக்க விசுவாசத்தின் தூண்களாக விளங்கியவர்கள. இப்படிப்பல அ ம திகளின் தியாகப் பணிவாழ்வு கத்தோலிக்க விசுவாசத்தையும், தமிழ் மக்களையும்,ஏன் ஈழநாட்டையும் வாழவைத்திருக்கிறது.

அ.ம.தி கள் குடும்பத்தின் 12 வது சபைத் தலைவராகிய பேரருட்திரு. உவில்செய்ம்ஸ்ரெச்ளிங் ஈழத்தின் தென் பகுதியில் பணியாற்றும் அ ம தி களின் யாழ். மாகாணத்தின்பகுதிகளான வன்னி, மன்னார்சென்று இன்றுயாழ்ப்பாணம் வருகிறார்கள்.

ஜேர்மனிய நாட்டைச் சேர்ந்த இவர், எளிமையும், தூய்மையும், வாய்மையும், தீர்க்க தரிசனப்பார்வையும் கொண்ட ஒரு தலைவர் அரசியல் சிக்கல்களும், பொருளாதார நெருக்கீடுகளும் கொண்ட தென்அமெரிக்க கண்டத்தில் பராக்குவே நாட்டில் 1974- 1992 வரையிலான காலப்பகுதியில்மறைபரப்பாளராக சிறந்த பணியாற்றியவர்எம் நாட்டுநெருக்கடி நிலைமைகளைப் போலப துன்ப துயரங்களைக் கண்டவர், கேட்டவர், சந்தித்தவர் பாதிப்புற்ற மக்களில் தனிப்பட்ட அன்பும், கரிசனையும் அக்கறையும்கொள்பவர் தமிழ் மக்களாகிய எமது நீண்டவிடிவிற்கான பயணத்தை தூர இருந்து கொண்டே உன்னிப்பாகவும் அதேவேளை ஆழமாகவும் அவதானிக்கின்றஒரு தலைவர் எமது தேசத்தைப் பார்க்க மிக நீண்ட காலமாகவே காத்திருந்தார்.

பேரருட் சந்தை உவில் செய்ம் ஸ்ரெக்ளிங் அவர்களை வருக வருக என அன்போடு வரவேற்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். இத் தலைவரின் வருகை எமக்குப் புத்துணர்வையும், புதுத்தெம்பையும் அளிக்கட்டும்.

## பட்டமளிப்பு விழாவும் பரிசு வழங்கல் நிகழ்வும்

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினரால் வருடாந்தம் நடத்தப்படும் பட்டமளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது

இவ் விழாவில் இளம் சைவப் புலவர்கள், சைவப் புலவர்கள் ஆகியோருக்கு பட்டமளிப்பு விழா நடத்தப்படவுள்ளது.

அன்றைய தினம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட புராணபடனப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

(செ-49)

## காணாமற் போனோர் பற்றிய விசாரணைகளுக்காக உறவினர்க்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

1996, 97 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் யாழ். குடாநாட்டில் இருந்துகாணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளைமேற்கொண்டுவரும் விசேட புலனாய்வுத்துறையினர் பின்வருவோர் தொடர்பான விசாரணைக்கு அவர்களின் உறவினர்கள், சாட்சிகள் மற்றும் முறைப்பாட்டுக் காரர்களை யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்குமாறு அறிவித்துள்ளனர்.

★ நாகமுத்து செல்வரத்தினம் (கோ.இல பி-9/30 43, பொன்னம்பலம்வீதி அரியாலை.

★ நவரட்ணம் யோகநேசன் கோ. இல பி- 9/95 50/18, ஜோதி வீதி, நல்லூர்.

★ சிவகுரு தங்கத்துரை (கோ. இல பி - 9/144) ஐயனார் கோவிலடி நாவற்குழி கைதடி.

★ சண்முகம் வசந்தன் (கோ.இல பி9/159) ஆவரங்கால் கிழக்கு புத்தூர்;

★ யேசுதாசன்ஸ்ரேலிங்ஜீவா (கோ இல. பி - 9/152 ) நாவற்குழி கிழக்கு தச்சன் தோப்பு

★ கணபதிப்பிள்ளை கேதீசன் (கோ. இல பி- 1/459) மே-பா நடேசபிள்ளைகுமாரலிங்கம் வீதி இணுவில் கிழக்கு

★ பாலசிங்கம உதயகுமார் கோ இல பி - 1/7() ஏ ஜி. ஏ லேன் சுன்னாகம் உடுவில்.

★ மாணிக்கம்டெனிகாஞ்சன் கோ. இல பி - 1/347) கே. கே எஸ் வீதி மல்லாகம்.

(உ–10)

## நாளை போட்டிநிகழ்வுகள்

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான சமூகக்கல்வி பொது அறிவு எழுத்துப் போட்டி நாளை காலை 9 00 மணிக்கு அச்சுவேலி மத்திய கல்லூரியில்நடைபெறவுள்ளதாகக்கோப்பாய்க் கோட்டக் கல்விப்பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம் தெரிவித்துள்ளார். (செ-79)

### தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் வன்முறை

# தமிழ் பேசும் மக்கள் ஒருமித்தகுரலில் கண்டனத்தை வெளியிட வேண்டும்

### யாழ். கத்தோலிக்க மறை மாவட்டக் குழுவேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பெண்கள் மீது பொலிஸ் மற்றும் அரசபடையினர் இழைத்துவரும் பாலியல் வல்லுறவுக் கொடுமைகளுக்கு எதிராக, சகல தமிழ் பேசும் மக்களும் தமது கணடனத்தை ஒருமித்த குரலில் வெளிப்படுத்த வேண்டுமென யாழ் கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கில் இன்று இடம்பெறவுள்ள பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு எதிரான ஹர்த்தாலுக்குஆதரவு தெரிவித்து நேற்றுமுன்தினம் மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு அறிக்கையொன்றை வெளியிட்டது. அவ்வறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது பெண்களின் மானம் சிதைக்கப்படுவதை தடுக்கும் முகமாக இலங்கைத் தமிழர்கள் ஒன்றுபட்டு கண்டனத்தை வெளிப்படுத்துவதுடன், இன்றைய தினத்தை செபநாளாக அனுசரிக்கும் படியும் மேலும் அவ்வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

(க-இ)

### யாழ் நகரில்

## படையினரின் சோதனை நேற்று மந்த கதியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் நகரப் பகுதியில் நேற்று படையினரின் சோதனை நடவடிக்கைகள் மிகக் குறைந்த அளவிலேயே காணப்பட்டன.

மக்கள் நடமாட்டம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்பட்டது.

வாகனப் போக்குவரத்துகள் வழமை போலன்று மந்த கதியிலேயே இடம் பெற்றன. வர்த்தக நிலையங்கள் ஒரு சில திறந்திருக்கக் காணப்பட்ட போதிலும் வியாபாரம் மந்த கதியிலேயே நேற்று இடம் பெற்றது.

வடபிராந்தியபோக்குவரத்துச் சபையின்பஸ் சேவைகளும் மந்தமாகவேகாணப்பட்டது.

(க-06)

### யாழ்ப்பாண

## மாநகரசபை உறுப்பினர் கைதாகி விடுதலை

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாநகராட்சி மன்றஉறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் கடந்த 4ஆம் திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இன்று 7ஆம் திகதி நடைபெறவுள்ள தமிழ்ப்பெண்கள் மீதானபாலியல் வன்முறையை கண்டிக்கும் ஹர்த்தால் தொடர்பான துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தமை தொடர்பாக கடந்த 4ம் திகதி காக்கைதீவு பாதுகாப்பு அரண் இராணுவத்தினரால் இவர் கைது செய்யப்பட்டார்.

இவருடன் சார்ச் சாரதிஒருவரும் வேறு மூன்று ஆதரவாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்ட ஆலோசகரும் யாழ்.மாநகரசபை முதல்வருமான ந.ரவிராஜ் மேற்கொண்ட முயற்சியையடுத்து அன்று மாலையே இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

(க)

## 1200 மாணவருக்கு பால்மா, பிஸ்கட் வழங்கல்

[கோப்பாய்]

கோப்பாய் கோட்டத்திற்குட்பட்ட சுமார் ஆயிரத்து 200 மாணவர்களுக்கு முதற்கட்டமாக பால்மா, பிஸ்கட் என்பன விரைவில் வழங்கப்படவுள்ளதாக ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பிஸ்கட் மற்றும் பால்மா வகைகள் ஏற்கனவே வந்து சேர்ந்துவிட்டதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

பரீட்சார்த்த முயற்சி வெற்றி பெறும் பட்சத்தில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட போஷாக்கு குறைந்த மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தின் கீழ் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

[க-79-6]

## இராசி பலன்

6-7-2001
(ஆனி 22, வெள்ளி)
பிரதமை மு.இ 10 13 வரை
பூராடம் மு.ப 10 35 வரை
ராகுகாலம் 10 28-11:58
நல்ல நேரம் 5.58-6. 28
சித்தம்

**மேடம்**
வீண்பயம், ஆன்றோர் மதிப்பு, வயிற்றுக் கோளாறு, தொழில் நன்மை.

**இடபம்**
போசன சுகம், எதிர்பாராத பிரச்சினை, முயற்சி தாமதம், நண்பர்கள் வெறுட்பு.

**மிதுனம்**
உஷ்ண நிலை, வாகன வசதி, அபூர்வ சந்திப்பு, சுவாரஸ்யம்.

**கடகம்**
காரியம் கைகூடும், சத்துரு ஜெயம், புதிய முயற்சி, மன மகிழ்ச்சி.

**சிங்கம்**
வியாபாரச் சிறப்பு, மனச் சஞ்சலம், முயற்சி தாமதம், வியாதி.

**கன்னி**
உறவினர் மனஸ்தாபதம், பயந்த சுபாவம், காரியதாமதம், தொழில் நன்மை.

**துலாம்**
நினைத்த காரியம் கைகூடும், கூட்டு முயற்சி, புதியவர் சந்திப்பு, செல்வாக்கு.

**விருச்சிகம்**
பணச்செலவு, நிலைக்கேடு, பெரியோர் மனஸ்தாபம், முயற்சி தாமதம்.

**தனுசு**
கற்பனை மிகுதி, நண்பர்கள் உதவி, பிரயாசை, காரியம் கைகூடும்.

**மகரம்**
மனக்கிலேசம், வீண் அலைச்சல், திடீர் நன்மை பொருள் விரயம்.

**கும்பம்**
தெய்வதரிசனம், தொழில் சிந்தை, கௌரவம், காரியம் கைகூடும்.

**மீனம்**
தொழில்சிறப்பு, முயற்சி கைகூடும், பிறர் உதவி, சுப செய்தி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# மீனவர் வாழ்வை மேம்படுத்த 300 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்

### அமைச்சர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் யுத்த சூழ்நிலை காரணமாக எதிர்கொண்டு வரும் பல்வேறு நெருக்கடிகளைப் போக்கும்முகமாகபுனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மூலமாக 300 இலட்சம் ரூபாவை மீனவர் சங்கங்களுக்கு வழங்கவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ளார்.

மேற்படி 300 இலட்சம் ரூபா மீனவர் சங்கங்களுக்கு முதற்கட்டமாக வழங்கப்படுமெனவும்,

சரியான வழியில்பயன்படுத்தப்படுமிடத்து மேலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் கடந்த செவ்வாயன்று அமைச்சர் தன்னைச் சந்தித்த மீனவர் சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

பனிக்கட்டி உற்பத்தித் தொழிற்சாலை நிறுவுவதற்கான முயற்சிகளைத் தான் மேற்கொள்ளவுள்ளதாகவும்,

மீன் பிடிக்கும் கடல் எல்லை சம்பந்தமாக பாதுகாப்புப் படை அதிகாரிகளுடன் சந்திப்பை ஏற்படுத்தி உரிய பரிகாரம் காண நடவடிக்கை எடுப்பதெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (உ)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம் 16 ஆம் நாள்



## 'நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை'

### நா உன்னையே பாடும்!

கண்ணிரண்டும் உன்னுருவைக் காணவேண்டும்
காலிரண்டும் உன்னடியை நாடவேண்டும்
பண்ணிசைக்கும் நா உனையே பாடவேண்டும்
பத்தியோடு கை உனையே கூடவேண்டும்
எண்ணமெல்லாம் உன் நினைவே யாகவேண்டும்
இருப்பதெல்லாம் நயினையிலே காணவேண்டும்
மண்ணளந்த மாயவனின் தங்கையேயெம்
மண்ணினிலே நாமிருந்து வாழ வேண்டும்

கவிஞர்

### எம் அருமைத் தாயே!

நயினையிலே வீற்றிருந்து நம்மை
யெல்லாம் ஆளுகின்ற நாகதாயே!
கைலையிலே வீற்றிருக்கும் எம்பெருமான்
நாயகியே அம்மா தாயே!
தயிரிடையில் வெண்ணை யென
ஒளிருகின்ற செல்வத்தாயே!
உயிரிடையே கலந்து நின்று அருளும்
எம்அருமைத்தாயே நாக பூஷணியே!

வே. சிவகணேசன்

### சமாதான தேர் ஏறிவா!

நம்மையாளும் நயினைதீவு நாகம்மா வருவாய்
நாம் அழைக்கும் காரணத்தைநன்றாக அறிவாய்
இம்மையிலே நடக்கும் இனப்பிரச்சினையைப் புரிவாய்
இன்பத்தீர்விற்கே இனிய வழி நீ வகுப்பாய்
எம்மையே காத்தருள அவதாரம் எடுப்பாய்
எல்லையற்ற போருக்கு முற்றுப்புள்ளி கொடுப்பாய்
அம்மையே ஆனந்தமாய் இங்கு நீ வருவாய்
அவனியிலே சமாதானம் செய்து நீ தருவாய்

து. ஜேந்திரன்
2ம் வருடம்
முகாமைத்துவவணிகபீடம்
யாழ்பல்கலைக்கழகம்

### திசை முகம் காட்டுவாய்

தெப்பமேறும் நாகத் தாயே
திரண்டு வந்தோம் நாகத் தாயே
தீர்வொன்று தரவே தாயே
திசை முகம் காட்டு வாயே

இ. டினேஷன்
உருப்பிராய் இந்துக் கல்லூரி

### பணிந்தேத்துகின்றோம்!

" ஆர்ப்பரிக்கும் அலையோசை கேட்டே நாம்
ஓடி வந்தோம்
ஆழ் கடலின் பயங்கரத்தைத் தாண்டி நாம்
நாடி வந்தோம்
துன்ப துயரங்கள் பட்டே நாம்
விரைந்து வந்தோம்
உன் அருளின் மகிமைதனை ஊர் சொல்ல நாம்
கேட்டு வந்தோம்
மாங்கல்யதாரணத்தைக் கொடுப்பாய் என நாம்
நம்பி வந்தோம்
பிள்ளை வரம் தந்துதவுவாய் என நாம்
கையேந்தி வந்தோம்
நாகம் பூசித்த நாக பூஷணித்தாயே நாம்
பணிந்தேத்தி நின்றோம்
உன் கடைக்கண் பார்வைக்கே நிதம் நாம்
தொழுது நிற்கின்றோம்"

"நயினை விஜயன்"

# உயர்தர மாணவர்களுக்கான அறிவியல் வினாக்கள்

## இல: 64 தொகுப்பு- ரீ. மயூரன்

### நுண்ணறிவு

★ பின்வரும் 5 வினாக்களிலும் 5 சொற்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று முக்கிய இயல்பில் இருந்து வேறுபடுகிறது அதனை கீழ் கீறிடுக.

01) எழுது, கீறு, நட, துள்ளு, பாடு
02) அம்மா, அப்பா, பாட்டி, அக்கா, மாமி
03) சோறு, குரக்கன், சோளம், வரகு, பயறு
04) றோசா, மல்லிகை, முல்லை, குறோட்டன், அல்லி
05) மா, பலா, தோடை, பாலை, முதிரை

★ தொடரை அவதானித்து பொருத்தமான எண்/இலக்கத்தைக் கொண்டு இடைவெளியை நிரப்புக.

06) 3, 5, ......, 9, 11, ......, 15
07) A, C, E, ......, I, K, ...
08) 100, ......, 400, 800 ...
09) 4, 9, ......, 22 30 39 ...
10) Z, A, Y, B, ......, C, W ... ..

★ கீழ் உள்ள வினாக்களில் முதலாம், இரண்டாம் சொற்களுக்கிடையிலுள்ள ஒப்புமையை இனங்கண்டு மூன்றாவது சொல்லுக்கு பொருத்தமான நான்காவது சொல்லை அடைப்பில் இருந்து தெரிக.

11) முத்து-சிப்பி, தந்தம் ————
[ஆபரணம், வெண்மையானது, யானை, மிருகம்]
12) அணி-சட்டை, உண் ————
[உணவு, நீர், சமைத்தல், சோறு]
13) தோடு-நகை, மேசை ————
[கதிரை, வாங்கு, நாற்காலி, தளபாடம்]
14) நண்பன்-பகைவன், பெரிய ————
[ஒடுங்கிய, மெல்லிய, சிறிய, குறுகிய]
15) சமுத்திரம்-வாவி, கண்டம் ————
[குடா, தீவு, நாடு, பட்டினம்]

★ கீழே தரப்பட்ட பெருக்கல் கணக்கில் தானங்களுடன் இடை இடையே எழுத்துக்களும் தரப்பட்டுள்ளது. எழுத்துக்களுக்கான தானங்களை கண்டறிக.

```
  F 1 F
    2 E
  -----
  6 3 C
 6 2 D
 ------
 2 × B C
```

16) F = ————
17) E = ————
18) C = ————
19) D = ————
20) B = ————

### பொது அறிவு

A தொகுதியில் நூலின் பெயரும் B பகுதியில் எழுதியோரின் பெயரும் தரப்பட்டுள்ளன. பொருத்தமான நூலுடன் அதை எழுதியவரின் பெயரை தொடர்புபடுத்துக.

| | A | B |
|---|---|---|
| 21) | கீதாஞ்சலி | கொடில்யர் |
| 22) | சிலப்பதிகாரம் | எட்வின் ஆர்தெனல்ட் |
| 23) | அர்த்த சாஸ்திரம் | வில்லி புத்தூரர் |
| 24) | ஆசிய ஜோதி | இளங்கோ |
| 25) | மகாபாரதம் | தாகூர் |

★ 26 30 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட 4 விடைகளுள் சரியானதைத் தெரிவு செய்க.

26) முதலமைச்சராக இருந்து ஒருவர் ஊழல் குற்றச் சாட்டின் பேரில் அண்மையில் சிறை சென்றுள்ளார். அவரது பெயர்?
1) பாத்திமா பீவி 2) மு. கருணாநிதி
3) ஸ்ராலின் 4) பழ. நெடுமாறன்
27) முக்கியத்துவம் வாய்ந்த முஷாரப் வாஜ்பாய் பேச்சு வார்த்தை நடைபெறவுள்ள திகதி?
1) ஜுலை 12 2) ஜுலை 14 3) ஓஸ்ட் 1 4 ஓஸ்ட் 12
28) தாஜ் ஹாலைக் கட்டி முடிக்க எடுக்கப்பட்ட காலம்?
1) 10 ஆண்டுகள் 2) 15 ஆண்டுகள்
3) 20 ஆண்டுகள் 4) 5 ஆண்டுகள்
29) மிகவும் உயரமான ஏரி எது?
1) டிட்டிகா ஏரி 2) கஷான் ஏரி 3) அடெப்ஸ் ஏரி
4) பனுலா ஏரி
30) ஐ. நா. சிறுவர் நிதியம் (UNICEF) ஆரம்பிக்கப் பட்ட ஆண்டு?
1) 1969 2) 1945 3) 1979 4) 1978

★ பினவரும் சர்வதேச தினங்கள் கொண்டாடப்படும் திகதி மாதத்தை தருக.

31) உலக மனநோய் சுகாதார தினம் — — — —
32) சர்வதேச எழுத்தறிவு தினம் — — — —
33) உலக புகைத்தல் ஒழிப்புத் தினம் — — — —
34) மனித உரிமைகள் தினம் — — — —
35) சர்வதேச பொறுமை தினம் — — — —

★ பின்வரும் சிறப்புப் பெயர்களுக்கு உரித்தான நாடு நகரத்தைத் தருக?

36) தங்கக கம்பளிப் பூமி — — — — — —
37) முத்துத் தீவு — — — — — —
38) வெள்ளை நகரம் — — — — — —
39) புனித பூமி — — — — —
40) பொன் வாயில் நகரம் — — — — — —

**குறிப்பு:-**

விடைகளை வேறுதாளில் எழுதி அனுப்பவும் இதற்கான விடைகளை 11-07-2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## அறிவியல் வினா-63 விடைகள்

01) பத்திரிகைகள்
02) கும்பகோணம்
03) பாதிக்கப்படும்
04) அபசகுனம்
05) பசுமை
06) தபோதனம்
07) அணி
08) மஞ்சு
09) அப்பு
10) காயம்
11) ஒற்றை, தனி
12) பிணம், பணம்
13) 78 04
14) அரசன், பருப்பு
15) மைனா, கிளி
16) A = 3
17) B = 33
18) C = 40
19) D = 173
20) E = 117
21) ஹம்பேர்க்
22) தபனாங்
23) பெர்த்
24) டெல்அவிவ்
25) வான்கூவர்
26) ஃபிராங்கிளின் ரூஸ்வெல்ட்
27) ஃபிலிட்மார்ஷல் ஸ்மாட்ஸ்
28) பாரிஸ்
29) கன்னியாகுமரி
30) றேடியம்
31) கியூபா
32) அயர்லாந்து
33) அவுஸ்திரேலியா
34) அவுஸ்திரேலியா
35) பெல்ஜியம்
36) மே 15
37) ஜுன் 5
38) ஒக்டோபர் 9
39) டிசம்பர் 7
40) டிசம்பர் 1

## அறிவியல் பகுதி இல-63

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர் பெயர்விபரம்

★ சி. சயந்தன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
★ வீரசிங்கம் செந்தூரஷன் மாசார், பளை.
★ வீரசிங்கம் செந்தீபன் மாசார், பளை.
★ ரீ. கௌசி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
★ பாலகிருஷ்ணன், சத்தியா கோகுலம் பொலிகண்டிவல்வெட்டித்துறை
★ சி. சிவஜா வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
★ சண்முகம் சஞ்ஜீவன் வேலாயுதம் மகாவித்தியாலயம்.
★ ராஜசிங்கம் நிவேதிகா றாஜவீதி கோப்பாய் தெற்கு.
★ அம்பலவாணர், அபிராமி கச்சேரியடி சுண்டுக்குளி.
★ எஸ் மனோகரன் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

## அறிவில் பகுதி வினா இல - 64

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..........................
சொந்த முகவரி: ..........................
கற்கும் பாடசாலை: ..........................
மாணவர் கையொப்பம்: ..........................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

# செய்தித் துளிகள்

## பிராந்தியத் தலைவராக நியமனம்

(மானிப்பாய்)

மானிப்பாய் கோவிற்பற்று லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் செ ஞானராஜா சர்வதேச லயன்ஸ் கழகங்கள் மாவட்டம் 306பி பிராந்தியம் 10க்குரிய பிராந்திய தலைவராக மாவட்ட ஆளுநர் லயன் உபாலி சமரசிங்காவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

2001 ஆம் ஆண்டு யூலை முதல் 2002 ஆம் ஆண்டு யூன் வரை தலைவர் சேவை புரிவதற்கு நியமிக்கப்பட்ட இவர் கடந்த 14 வருடங்களாக மானிப்பாய் கோவிற்பற்று லயன்ஸ்கழக அங்கத்தவராகவுள்ளார்.

லயன்ஸ்கழக சர்வதேச விருதுகள் பலவற்றைப் பெற்ற இவரின் வழி நடத்தலில் மானிப்பாய் கோவிற்பற்று கோப்பாய், சுன்னாகம், நல்லூர், வட்டுக்கோட்டை, மன்னார், வவுனியா வட்டம் ஆகிய லயன்ஸ் கழகங்கள் இயங்கவிருக்கின்றனர்.

லண்டன் நிதிசார் கணக்காளர் சங்கத்தின் முதுநிலை அங்கத்தவராகிய இவர், தற்போது ஜேர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிறுவன யாழ் புனரமைப்பு வேலைத் திட்டத்தில் திட்டக் கணக்காளராக கடமை புரிகின்றார். (உ-120)

## மூதாட்டி மரணம்

(கோப்பாய்)

தண்ணீர் எடுக்கச் சென்ற மூதாட்டி தவறுதலாகக் கிணற்றில் வீழ்ந்து மரணமடைந்த சம்பவம் அண்மையில் மருதனார்மடம் பகுதியில் நடைபெற்றுள்ளது.

செல்லையா இலட்சுமி (வயது 80) என்ற மூதாட்டியே இவ்வாறாக பரிதாபகரமாக மரணத்தைத் தழுவியவராவார். (க-79)

## ஆரம்பக்கல்வி செயலமர்வு

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் ஒன்று, இரண்டு ஆகிய வகுப்புகளிற்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, ஜீ.ரி.சற் நிறுவனத்தினால் நாளை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை ஆரம்பக் கல்விச் செயலமர்வு நடத்தப்படவுள்ளதாக கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞான சுந்தரம் தெரிவித்துள்ளார்.

இச் செயலமர்வு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது (செ-79)

## 187 வது ஆண்டுவிழா

(புலோலி)

மெதடிஸ்த திருச்சபை மிஷனரிகள் இலங்கைக்கு வந்த187வது ஆண்டுநிறைவு விழா பருத்தித்துறை மெதடிஸ்த ஆலயத்தில் சபைக்குரு அருட்திரு ஜி.ஏ சதீஸ் அடிகளார் தலைமையில் அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இதையொட்டி நடாத்தப்பட்ட வழிபாட்டில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி அதிபர் எம். ஸ்ரீபதி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் ஆகியோர் கலந்து கொண்டு பாடசாலைகளின் வரலாற்றில் மிஷனரிமாரினது பணிகள்பற்றி சிறப்புரையாற்றினார். பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு இருதயதாஸ் அடிகளார் ஆசியுரை நிகழ்த்தினார். [உ-52]

## பேரியலின் கொள்கைகளில் மாற்றம்

(கொழும்பு)

தமது கட்சி பேரம் பேசும் அரசியல் போக்கிலிருந்து முற்றாக மாறி எல்லா இனங்களினதும் முன்னேற்றத்திற்காகவும், நிரந்தர சமாதானத்திற்காக பாடுபடப் போவதாகவும் 'நுஆ' வின் தலைவி திருமதி பேரியல் அஷ்ரப் செய்தியாளர் மகாநாடொன்றில் தெரிவித்தார்.

'தாருஸ்ஸலாம்' தலைமைச் செயலகத்திற்கு நேற்று முதன் முறையாக விஜயம் செய்த அவர் கிழக்கு மாகாண மக்களின் நலன் கருதி அவசர காலச் சட்டத்தை ஆதரிப்பதாகவும் தெரிவித்தார்.

'நுஆ' வின் பதவியை வகிப்பதிலிருந்து இவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தாராயினும் நீதிமன்றம் இவர் மீதான தடையை நீக்கியுள்ளது தெரிந்ததே

இதே வேளை, திருமதி அஷ்ரப்பின் வீட்டில் கூடிய 'நுஆ' வின் முக்கியஸ்தர்கள் கட்சியின் பேராளர் மகாநாட்டை அம்பாறையில் இன்று நடத்துவதாகத் தீர்மானித்தனர். (உ)

## நிரந்தர நியமனம்

[யாழ்ப்பாணம்]

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதம் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் யாழ். பிரதேச செயலகத்தில்இடம்பெற்றது.

இந்த நிரந்தர நியமனக் கடிதங்களை யாழ். மாநகர சபை உறுப்பினர் ரீகனும், யேசுராசாவும் வழங்கினர். [உ-10]

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இன்றும் நாளையும் திருக்கோணமலையில் நடைபெறவுள்ளதமிழ்த்தினப் போட்டிகளில் கலந்து கொள்வோருக்கான கலந்துரையாடல் ஒன்று கடந்த 03 ஆம் திகதி காலை 10. 00 மணியளவில் ஈ. பி. டி. பி. யின் யாழ். மாவட்டத் தலைமைச்செயலகத்தில் இடம் பெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வட-மாகாண அதிபர்கள் சங்கத் தலைவர் க. இராஜதுரை, மாகாண மேலதிகக்கல்விப்பணிப்பாளர் ச. நா. தணிகாசலம் பிள்ளை உட்பட பிரமுகர்கள் பலர் உரை நிகழ்த்தினர்.

வட கிழக்கு மாகாணகல்வி கலாசாரவிளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் தமிழ்த்தினப் போட்டிகள் நடாத்தப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது (க)

## இன்று ஒரு தகவல்

# எடை குறைப்பு முக்கியம்

ஒருவர் சேமிப்புப் பழக்கத்தில் மிகவும் கெட்டிக்காரர். பணத்தைச் சேமித்தார், பொருளைச் சேமித்தார், புகழைச் சேமித்தார், அது வரைக்கும்சரி, அதே மாதிரி உடப்பில் கொழுப்பையும் சேமிக்க ஆரம்பித்தார். உடப்பு மிகவும் பெருத்துப் போனது. சேமிப்புப் பழக்கம் நல்லதென்றால், அதற்காக இப்படியா? சிலர் எப்படித்தெரியுமா? நல்ல குண்டாய் இருப்பார்கள். என்ன சார் கொஞ்சம் குறைக்கக் கூடாதா? என்று கேட்டால், இது ஒன்றும் அதிகம் இல்லை வழமையானது தான் என்று சொல்லுவார்கள். அப்படியென்றால் இன்னமும் மேலே போகும் போல் இருக்கிறது!

உடம்பு பெருத்துக் கொண்டே போனால், அது உண்மையாகவே சவனிக்க வேண்டிய ஒரு விஷயம். ஒருவருக்கு இப்போதிருக்கிற உடம்பு அளவு சரியாக இருக்கிறதா? பெருத்து இருக்கிறதா என்று மருத்துவ ரீதியாக எப்படிக் கண்டுபிடிக்கிறது? அதற்கு ஒரு சின்னக் கணக்குஇருக்கிறது. நீங்களே போட்டுப் பார்த்துக் கொள்ளலாம்; இதற்குக் கல்குலேட்டர் எல்லாம் தேவையில்லை. வேறு ஒன்றுமில்லை. உங்கள் மார்பளவு, வயது, உயரம் எல்லாவற்றையும் சேர்த்துக் கூட்டுங்கள். இதில் உங்கள் எடை சுமாராக 10 சதவீதம் அதிகமாக இருந்தால் நீங்கள் குண்டுதான். சந்தேகமே இல்லை!

குனிந்து நில்லுங்கள்; உங்கள் விலா எலும்புக்குக் கீழே தோல் ஒரு அங்குலத்துக்குக் கீழே தொங்கினால் உங்கள் உடம்பு பெரிதுதான். சந்தேகமே வேண்டாம் சரி, இதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? உணவுப்பழக்கம், இயந்திர வாழ்க்கை, போதுமான அளவுக்கு உடற்பயிற்சி, உடல் உழைப்பு இல்லாமலிருக்கிறது போன்றவைதான்; அப்பா, அம்மா குண்டாக இருந்தால் குழந்தையும் குண்டாகப் பிறக்குமா? 100க்கு40 பேருக்குத்தான் இப்படிப்பிறக்கிறது. அதேமாதிரி அப்பா, அம்மா ஒல்லியாக இருப்பவர்களுக்கு 10 சதவீதமான பேருக்கே குழந்தை குண்டாக இருக்கிறது. அதனால் பாரம்பரியத்தை இதற்கு ஒரு முக்கியமான காரணமாகச் சொல்ல முடியாது. குழந்தை கொழு கொழு என்று இருக்க வேண்டும் என்கிறதற்காக சில தாய்மார்கள் அடிக்கடி எதையாவது சாப்பிடச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். ''நீ அழாமல்சமர்த்தாக இருந்தால் உனக்குச் சொக்கலேட் தருவேன்'' என்று பேரம் பேசுகிறது எல்லாம் பழக்கமாகப் போனால் மாற்றுவது கஷ்டம்.

உங்கள் வீட்டுக்காரர் சமர்த்தாத்தானே இருக்கிறார். அவரிடம் சொக்லேட் கொடுத்தால் வேண்டாம் என்றா சொல்வார். மருமகளுக்குப் பிரசவநேரம் என்றால் அந்தப் பெண்ணை அசையாமல் ஒரேயிடத்தில் உட்காரவைத்து விதம்விதமாகச் சமைத்துப் போடுகிற மாமியார்கள் இருக்கிறார்கள். ஆச்சரியப்படவேண்டாம். அப்படியும் சிலர் அங்கே இங்கே இருக்கிறார்கள். இவையெல்லாம் நல்லதற்கென்றா நினைக்கிறீர்கள். உடப்பு பெருத்துவிடும். பிரசவத்துக்கு முன்னரும், பின்னரும் சரி எப்போதும் போல வேலைகளைச் செய்து கொண்டே வாருங்கள். உடம்பு நன்றாக இருக்கும். குழந்தைக்குப் பால் கொடுக்கவில்லையென்றாலும் தாய்க்கு எடைகூடும்.

சரி, பொதுவாக எடையைக் குறைப்பதற்கு என்ன வழி? முதலில் திடீரென்று ஒரே நாளில் அதைக் குறைப்பதற்கு முயற்சி செய்யக் கூடாது. கொஞ்சம் கொஞ்சமாக அதை வழிக்குக் கொண்டுவரவேண்டும். உணவுக்கட்டுப்பாடு, அவசியம் பழம், காய்கறி அதிகமாகச் சேர்த்துக்கொள்ளலாம். கிழங்குவகைகளைக் குறைக்கலாம். அரிசி, வாழைப்பழம் கிழங்குவகை, வெண்ணெய், கேக், முந்திரிப்பருப்பு, கிறீம் போன்றவை குறைக்கப்பட வேண்டியன; இரண்டு வேளையோ மூன்று வேளையோசாப்பாடென்றால் அதற்கிடையில் நொறுக்குத் தீனி சாப்பிடுவதை நிறுத்துங்கள்.

பொது இலட்சியங்களுக்காக எத்தனையோ தியாகிகள் உண்ணாவிரதமிருந்திருக்கிறார்கள். நீங்கள் உங்கள் சொந்த இலட்சியத்துக்காகவாவது தியாகியாக முடியுமா என்று பாருங்கள்? உடம்பு எடையைக் குறைக்க வாரம் ஒருதடவை சாப்பிடாமலிருக்கலாம். உப்பு அளவையும் குறைக்கவேண்டும். உடற்பயிற்சி, நீச்சல், வேகமாக நடக்கிறது. யோகாசனம், இவற்றில் எது வசதிபோ அதைச் செய்துவாருங்கள்;

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அப்பாவி இளைஞனுக்கு நஞ்சு மருந்து பருக்கிய நயவஞ்சகர் கூட்டம்

(மந்திகை)

வலுக்கட்டாயமாக நச்சுத் திராவகம் பருக்கப்பட்டதால் மயக்கமடைந்த நிலையில் இளைஞர் ஒருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்;

மிருசுவில் கெற்பேலியில் கடந்த திங்களன்று நடந்த இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கனகரத்தினம் அருள்ரத்தினம் (வயது-27) என்பவரே பாதிப்புக்குள்ளானவராவார்.

மாலை வேளை, தோட்ட வேலைகளை முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, திடீரென மடக்கிப் பிடித்த நால்வர், நஞ்சு மருந்தைப் பருக்கியதாகவும்,

மேற்படி இளைஞனுடன் காணித் தகராறு காரணமாக முரண்பட்ட சிலரே இதனைப் புரிந்திருக்கலாம் எனவும் தெரிய வந்துள்ளது. (உ-23)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில், JOHN HOUSTON இயக்கிய ''THE BIBLE'' எனும் திரைப்படம் நாளை சனிக்கிழமை மு ப. 10. 00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப் படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் பங்கு கொள்ள முடியும் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

# முஸ்லிம் காங்கிரஸிற்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும்

## அமைச்சர் மகிந்தராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவேண்டும் என கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ கருத்து வெளியிட்டுளளார்.

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்திற்கெதிராக நம்பிக்கையிலலாப் பிரேரணை கொண்டுவந்தது போல் அரசின் பங்காளிக் கட்சியாகவிருந்த முஸ்லிம் காங்கிரஸிற்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்க வேண்டும்.

கடந்த ஏழுவருடங்களாக ஆளும் பொ ஐ.ஐ முன்னணி அரசில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அங்கம் வகித்து வருகின்றது. அரசிற்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ்கட்சியுங் காரணம்.

இந்நிலையில் அரசிற்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஐ.தே. கட்சி எப்படி முஸ்லிம கட்சியின் ஆதரவைக் கோர முடியும் என்றும் அமைச்சர் கேள்வியெழுப்பியுள்ளார்.

அரசிற்கு எதிராக ஐ.தே. கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார். (க-செ)

## கால்நடை அம்மை தடுப்பூசி

(புலோலி)

பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கால்நடை அம்மை நோய்க்கான தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது;

ஒவ்வொருமாதமும் 24ஆம் திகதி புதன்கிழமைகளில் இத்தடுப்பூசி போடப் படுகின்றது.

கால்நடைகளுக்கு அம்மை நோய்க்கான தடுப்பூசியை ஏற்றி அவற்றைப்பாதுகாத்துக் கொள்ளும்படி பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.வசீகரன் கேட்டுள்ளார். (உ-52)

## ஆலயங்கள் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கு

(யாழ்ப்பாணம்)

சங்கானை புனித பிரான்சிஸ் சலேசியார் தேவாலயப் புனரமைப்புக்கென 5 இலட்சம் ரூபாவையும், கொக்குவில் தலையாழி அருள்மிகு ஞானவைரவர் ஆலய புனரமைப்புக்கு 2 இலட்சம் ரூபாவையும் வடக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நிதியிலிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கியுள்ளார்(உ)

## சந்தை விஸ்தரிப்பு

(கல்வயல்)

வாங்குவோர், விற்பனை செய்வோர் நலன்கருதி உடுப்பிட்டிச் சந்தை விஸ்தரிக்கப் பட்டுவருகிறது.

கரவெட்டி பிரதேச சபையினர் இப் பணியை மேற்கொண்டு வருகின்றனர். (உ-111)

## பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் வேலையற்றபட்டதாரிகள் ஆயிரம் பேருக்கு விரைவில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளதாக கல்விப்பணிப்பாளர் எஸ். கமலநாதன் தெரிவித்துள்ளார்.

இந் நியமனம் பட்டம் பெற்ற காலத்தின் அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. (உ-5)

## கத்தரிமூடைக்குள் குண்டு மீட்பு

(மட்டக்களப்பு)

கல்முனைச் சந்தையில் நேற்றுக் காலை கத்தரிக்காய் மூடையொன்றிலிருந்து குண்டொன்று மீட்கப்பட்டதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்;

கத்தரிக்காய் மூடைக்குள் மறைத்துக்கொண்டு குண்டு எடுத்துச் செல்லப்படுவதாக கிடைத்த தகவலை அடுத்து விசேட அதிரடிப் படையினர் மூடையை சோதனையிட்டு குண்டை மீட்டு அதனை செயலிழக்கச் செய்ததாக தெரிவிக்கபபடுகிறது.

குண்டு எவ்வாறு கொண்டு வரப்பட்டதென்பது குறித்து படையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## கரவெட்டியில் கால்நடை உபவைத்திய நிலையம்

(புலோலி)

கரவெட்டியில் கால் நடை வைத்திய நிலையத்தின் உப நிலையம் ஒன்று இம் மாதம் 9 ஆம் திகதி திறந்து வைக்கப் படவுள்ளது.

பருத்தித்துறை கால் நடை வைத்திய கலாநிதி எஸ் வசீகரன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பி இராமநாதன் உப- நிலையத்தை திறந்து வைப்பார்;

கால் நடைகளுக்கான சகல சேவைகளும் இந்த உப நிலையத்தில் மேற்கொள்ளப்படுமென கால் நடை வைத்திய அதிகாரி தெரிவித்தார் (உ-52)

## அரசைப்பதவி கவிழ்ப்பதே ம'வி.மு.இன் நோக்கம்

### பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசைப்பதவியிலிருந்து இறக்குவதென்று உறுதிபூண்டுள்ளதாக அண்மையில் கொழும்பு ஹயிட்பாக் மைதானத்தில் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டத்தில் பேசிய அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிட்டார்.

இருப்பினும், ஐ தே.க.வை பதவியிலமர்த்துவது தமது நோக்கமல்ல எனவும் தெரிவித்தார்

''இவனும் ஒன்றுதான் அவனுமொன்றுதான்'' என்றே நாம தேர்தலின் போது கூறியிருந்தோம்; இப்போது'' இவனிலும் பார்க்க அவன் நல்லவன்'' என்று எம்மால் கூறமுடியாது என்றார். (உ)

## மண்டலாபிஷேக பூர்த்தியும் சங்காபிஷேகமும்

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி முத்துமாரியம்மன் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தியும், சங்காபிஷேகமும் இன்று நடை பெறவுள்ளன. (செ - 79)

## குற்றமே கூண்டில் ஏறு!

அழுகை தமிழன் வாழ்வோ
அடங்குதல் இனியும் தகுமோ
நிலவை சிதைக்கும் கூட்டமே
நீளக் குழிகள் உமக்கே
உரிமை எமக்கு இல்லையோ
உலகே இதைக் கேளாயோ
அடிமைகள் அல்லவே நாங்கள்
ஆளும் உரிமைகள் உண்டு
நரிகளாய் வேட்டை ஆடுவதோ
நாமும் அடங்கிப் போவதோ
துடிக்கிது மீசை முழங்கடா
தூங்கும் தமிழத் தட்டடா
நெருப்பெடு தீயவை கொளுத்த
நேர்மையில் வாழ்க்கை வேண்டுமே
குமருகள் கற்பைக் குடிப்பதோ
குனிந்தே நாமும் நிற்பதோ
பெண்களுக்கில்லை காவலே
பஞ்சணை அல்ல அவர்களே!
எத்தனை பெண்களை கடித்தார்கள்
இனியும் பொறுமை வேண்டுமோ!
அம்மண ஆட்சி தன்னிலே
அவதியுறும் பெண்கள் எத்தனை
ஆசைகள் தீர்க்க போதைகளா
நீதியே இங்கு இல்லையா
வேலிகள் தாண்டி மேய்வதா
வேதனை இன்றும் தொடருமா
குற்றமே கூண்டில் ஏறட்டும்
சட்டமே ஆட்சி செய்யட்டும்
பத்திரம் என்று எச்சரிப்போம்
பொங்கினால் போதும் மிச்சமில்லை

கு. றஜீபன்

# ஜெயாவின் தான்தோன்றித் தனமான ஆட்சியில்
# மத்திய அமைச்சர்களுக்கு நேர்ந்த கதி
# பிரதமர் வாஜ்பாய்க்கும் ஏற்படலாம்

## ப. சிதம்பரம் எச்சரிக்கை

(சென்னை)

மத்திய அமைச்சர்களான டி ஆர். பாலு மற்றும் முரசொலி மாறன் ஆகியோரை தமிழ் நாட்டுப் பொலிஸார் 'கைது செய்ததற்கு உரியநடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்காலத்தில் இந்தியப் பிரதமர் வாஜ்பாயை கைது செய்யவும் ஜெயலலிதா உத்தரவு பிறப்பிப்பார் என த.மா.கா ஜனநாயகப் பேரவைத் தலைவர் ப சிதம்பரம் கூறியுள்ளார்.

விருது நகர் அனுமான் காபி திருமண மண்டபத்தில் நடைபெற்ற த. மா. கா ஜனநாயகப் பேரவையின் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ப.சிதம்பரம் மேலும் தெரிவிக்கையில்;

மத்திய அமைச்சர்களை மாநில அரசு கைது செய்ய முடியுமா? கைது செய்தமைக்கு என்ன காரணம்? பிடி ஆணை எங்கே? என்று நீதிபதி கேட்டதற்கு இனிமேல் தான் ஆதாரம் தேட வேண்டும் என்று காவல்துறை அதிகாரி கூச்சமில்லாமல் தெரிவித்துள்ளார்.

ஒரு முதலமைச்சரின் கையாள் என்ற முறையில் அவர் இவ்வாறு கூறி இருக்கலாம்.

ஆனால், இந் நிலைமை நீடித்தால் எதிர்காலத்தில் பிரதமரையும் ஜெயலலிதா கைது செய்ய முயற்சிப்பார் என்பதில் ஐயமில்லை என சிதம்பரம் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## நெருக்கடி நிலை தவிர்ப்பு

வட அயர்லாந்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை நீக்கும் முயற்சிகளில் பிரிட்டனும் அயர்லாந்தும் ஈடுபட்டுள்ளன.

வட அயர்லாந்தில் உள்ள கத்தோலிக்க மற்றும் புரட்டஸ்தாந்து தலைவர்களுடன் பேச்சு வார்த்தைகளில் இவை ஈடுபட்டுள்ளன.

## உலக தரிசனம்

# அபுசெய் தீவிரவாதிகளால் பணயக் கைதிகள் விடுதலை

(மணிலா)

தம்வசமுள்ள பணயக் கைதிகள் இருவரை அபுசெய்யாப் போராளிகள் விடுதலை செய்துள்ளதாக பிலிப்பைன்ஸ் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

15 வயதானவலைனே, 32 வயதான லூயில் ஆகிய இருவருமே விடுதலை செய்யப்பட்டவர்கள்.

ஒருவருக்கு 3 மில்லியன் பெஸோவும் மற்றவருக்கு 5 இலட்சம் பெஸோவும் குடும்பத்தாரால் கெரில்லாக்களுக்கு கப்பமாக வழங்கப்பட்டதையடுத்தே அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது அவர்கள் இருவரும் ஸம்பொங்கோவில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-9)

# கொலம்பியா சிறையில் கலகம் 16 கைதிகள் பலி

[பொகோடா]

கொலம்பியாவில் உள்ள மிக முக்கிய சிறைக்கூடம் ஒன்றில் ஏற்பட்ட கலகத்தில் 16 கைதிகள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

லாமொடெயோ சிறையில் உறவினர்கள் கைதிகளைச் சந்தித்து சிறு கைகலப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை,

மார்க்ஸிய, பார்க் கிளர்ச்சிக்காரர்கள் சிறையை உடைத்துத் தப்ப முயன்ற போது சண்டை ஏற்பட்டதாகவும் அப்போது கலகம் அடக்கும் பொலிஸார் நடவடிக்கையில் இறங்கி நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இடதுசாரி கெரில்லா கைதிகளுக்கும் தீவிர வலது சாரி பாரா இராணுவத்திற்கும் இடையே கொலம்பிய சிறையில் மோதல்கள் இடம் பெறுவது வழமையான ஒன்றென்பதும் குறிப்பிடத்தக்கது. [உ-9]

# சிரியநிலைகளைத் தாக்கும் இஸ்ரேலின் செயல் குறித்து சவுதி பலத்த கண்டனம்

(ரியாத்)

லெபனானிலுள்ள சிரிய இராணுவ நிலைகள் மீது நடத்தும் தாக்குதல்களை விஸ்தரிக்கப் போவதாக விடுத்த இஸ்ரேலின் அறிவிப்பை சவுதி அரேபியா வன்மையாகக் கண்டித்துள்ளது:

சவுதி மன்னர் பஹ்தின் தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இவ்வாறு இஸ்ரேல் மீது கண்டனம் விடுக்கப்பட்டுள்ளது (உ-9)

# ஆப்கானுக்கு எதிராக அமெரிக்கா பொருளாதார தடை உத்தரவு

(வாஷிங்டன்)

சர்வதேச பயங்கரவாதியான சவுதி நாட்டவரான ஒஸாமா பின் லேடனுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கும் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கும் உத்தரவை அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் டபிள்யூ புஷ் பிறப்பித்துள்ளார்.

ஒஸாமா பின் லேடனை அமெரிக்கா தேடி வருவதுடன் இவரைப் பிடித்துத் தருபவர்களுக்கு பெருந் தொகை சன்மானம் வழங்கப்படும் என அறிவித்திருந்தும் தெரிந்ததே.

இந் நிலையில், ஒஸாமா பின் லேடனுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆப்கானிஸ்தான் நாட்டுக்கு பொருளாதாரத் தடை விதித்து அழுத்தம் கொடுக்கப் போவதாகப் புஷ் அறிவித்துள்ளார். (உ-9)

# பொலிஸ் பாதுகாப்பை கருணாநிதி புறக்கணிப்பு

(சென்னை)

''என்னை அடிக்கும்போது வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற பொலிஸின் பாதுகாப்பு எனக்குத் தேவையில்லை'' என்றும் மாநில அரசால் தமக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் பாதுகாப்பை விலக்கிக் கொள்ளுமாறு கருணாநிதி கேட்டிருக்கின்றார்.

நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட முன்னர், சென்னை மத்திய சிறையில் இருந்து உள்துறைச் செயலருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில்,

கைது செய்யப்பட்ட போது மேலிடத்து உத்தரவின்படி கைது செய்யவந்த உயர் பொலிஸ் அதிகாரிகள் தன்னைத் தாக்கிய போது தனது பாதுகாப்புக்கென நியமிக்கப்பட்டிருந்த பொலிஸார் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர்.

அவ்வாறானவர்கள் எப்படி எனக்கு பாதுகாப்பு வழங்க முடியும் என்று கேள்வியெழுப்பியுள்ளார். (உ-8)

# நேபாள அரசகுடும்ப உதவியாளர்கள் நால்வர் பதவி நீக்கப்பட்டனர்

(காட்மண்டு)

நேபாளத்தின் முன்னாள் மன்னர் மற்றும் அரசகுடும்பத்தினர் ஆகியோரை ஒரு மாதத்திற்கு முன்னர் படுகொலை நிகழ்ந்த போது கவனக்குறைவாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நான்கு அரசகுடும்ப உதவியாளர்களை நேபாள அரசர் ஞானேந்திரா பதவி நீக்கம் செய்துள்ளார்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள, வேறும் பலர் மேற்படிகுற்றச்சாட்டின் பேரில் பதவிநீக்கம்செய்யப்பட்டுள்ளதாக அரண்மனைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் இன்னும் நடந்து கொண்டிருப்பதாக தெரியவருகிறது. (உ-9)

# படுகொலை நடந்த நேபாள அரண்மனையை இடித்துத் தள்ள உத்தரவு

(காட்மண்டு)

காட்மண்டுவில் உள்ள அரச அரண்மனையில், படுகொலை நடந்த இடம் முற்றாக இடித்துத் தள்ளப்பட இருப்பதாக நேபாளத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நேபாள தலைநகர் காட்மண்டுவில் உள்ள நாராயண ஹூதி என்ற அரண்மனையிலேயே ஜூன் மாதம் முதலாம் திகதி மன்னர் பிரேந்திரா குடும்பத்தினர் படுகொலை செய்யப்பட்டனர்.

அவ்விடத்தைப் பார்க்கும் போதெல்லாம் நிகழ்ந்த படுகொலை ஞாபகம் வருவதாலும் அப்பகுதியில் கெட்ட ஆவிகள் உலாவுவதாலும் அப்பகுதியை இடித்துத் தள்ளும்படி தற்போதைய நேபாள ராணி ரத்னா உத்தரவிட்டுள்ளார் என அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (உ-9)

# மெக்ஸிக்கோ ஜனாதிபதி 2-வது திருமணம்

(மொன்ரெறி)

மெக்ஸிக்கோஜனாதிபதி பொக்ஸ் தனது 59 ஆவது வயதில் அவரது பேச்சாளராகக் கடமையாற்றிய 48 வயது நிரம்பிய மார்த்கா சஹகுவன்என்றபெண்ணைத் திருமணம் செய்துள்ளார்.

பொக்ஸ், சஹவன்ஆகிய இருவருக்கும் இடையே தொடர்புகள் இருப்பதாக நிலவி வந்தவதந்தி மேற்படி திருமணத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, பொக்ஸ், சஹகுவன் ஆகியோர் ஏற்கனவே திருமணம்புரிந்துவிவகாரத்துப் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

# வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

## ★ இட்லி உண்ணும் இயந்திர மனிதன்

மின்சார சக்தியில் இயங்கும் இயந்திர மனிதன் பற்றி அறிந்துள்ளோம். ஆனால் நாம் உண்ணும் உணவுப் பொருட்களை உண்டு இயங்கும் இயந்திர மனிதனைப் பற்றி கேள்விப்பட்டுள்ளீர்களா?

G astron I e' எனப பெயரிடப்பட்டிருக்கும் இந்த இயந்திர மனிதனை ஃபுளோரிடா பல்கலைக் கழகம் உருவாக்கியுள்ளது.

இந்த மனிதனுக்குள் ஈ கோலி (E-CO.Y) நுண்ணுயிரிகளை மின்சார சக்தியாக்கும் கருவி வைக்கப்பட்டுள்ளது இவ் ஈ-கோலி எஞ்சின் சாதாரண தோசை, இட்லியைக் கூட சாப்பிட்டு மின் சாரத்தை உருவாக்கும் தன்மை கொண்டது என இதனை உருவாக்கிய இயந்திரவியல் பேராசிரியர் ஸ்டூவார்டு வில்கின்ஸன் கூறியுள்ளார்.

## ★ உப்பான கடலைப் பற்றி...

பூமியின் பரப்பளவில் 71 சதவீதத்தை விழுங்கி விட்ட கடலைப் பற்றி மேலும் கண்டறியப்பட்டுள்ளது.

உலகிலேயே மிகப் பெரிய கடல் பசுபிக் கடல்தான். மிகவும் ஆழமான கடலாகவும் இதைக் கூறலாம். மிக அதிகளவுஉப்பாகக் காணப்படும் கடல் 'சாக் கடல்' தான்; நீரால் சூழப்பட்ட நிலங்கள் இருக்கின்றன; ஆனால் நிலத்தால் சூழப்பட்ட பெருங்கடல் கஸ்பியன் கடல் என்பது வியப்பூட்டும் சேதி தான். அடுத்து உலகிலேயே மிகப் பெரிய அலைகள் உருவாக்கும் கடல் ஃப்ன்டி அலை விரிகுடாவில் காணப்படுகின்றது. அது சரி கடலைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் துறையை ஓஷனோகிரஃபி (OCEANOGRAPHY) என அழைப்பதை அறிந்துள்ளீர்களா?

- அவதானி -

# ஐ.நா.சபை தலைமைக் காரியாலய கட்டடம் புனரமைப்பு

(லண்டன்)

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைக் காரியாலய கட்டடப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாக ஐ நா வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன;

இப் புனரமைப்புப் பணியினை மேற்கொள்ள மிலானைச் சேர்ந்த ரெனடோ சர்னோகட்டடநிர்மாணநிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது

இரண்டாவது உலகமகா யுத்த முடிவில் 11 நாடுகளின் நிறுவனங்களினால் தற்போதைய ஐ.நா. கட்டடம் வடிவமைக்கப்பட்டது;

தற்போதுள்ள பொதுச் சபை மண்டபம், 2 ஆயிரத்து 450 ஜன்னல்களையும், 15 நாடுகளின் பாதுகாப்புச்சபைகளையும் கொண்ட 39 மாடிகளைக் கொண்டதான கண்ணாடிக் கட்டடம் என்பவை 1952 இல் பூர்த்திசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

இடிப்பாரை இல்லாத ஏமரா
மன்னன்
கெடுப்பார் இலானும்
கெடும்
குறள்

# வலம்புரி

## எழுச்சி பிறக்கட்டும்

இனவாதம் இலங்கையில் என்று தலை தூக்கியதோ அன்று முதல் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தாராளமாக மலிந்து விட்டது.

இதன் ஒரு பகுதியே தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவாகும். உலகம் முழுவதும் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற போதிலும், இலங்கையில் தமிழ் பெண்கள் மட்டும் தமது அடிப்படை மனித உரிமைகளைக்கூட அனுபவிக்க முடியாதுள்ளது.

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய காவல் துறையினரே பாலியல் வன்முறைகளில் ஈடுபடுகிறார்களெனில், அவர்களிடமிருந்து தமிழ் மக்கள்தமதுஉரிமை குறித்து எதனையும் எதிர்பார்க்க முடியாது.

யாழ்ப்பாணத்தில்ரஜனி வேலாயுதபிள்ளை, கிருஷாந்தி குமாரசுவாமி, சாரதாம்பாள் என்ற பெயர்ப்பட்டியல் நீண்டு செல்ல, மட்டக்களப்பு, திருமலை, மன்னாரிலும் பாலியல் வல்லுறவின் பட்டியல் நீண்டேசெல்கிறது.

இதற்கு மேலாக அண்மையில கொழும்பில நடந்த மலையகத் தமிழ்ப் பெண்மீதான பாலியல வல்லுறவு இப்படியே தமிழப் பெண்களின் வாழ்வு அச்சம் நிறைந்த மானம் காக்க முடியாததாக இருக்கின்றதெனில் இலங்கையில் இயங்கும் பெண்கள் அமைப்புகளும் தமக்குள் சிங்கள - தமிழ் - முஸ்லிம் பெண்களென்ற பேதமையைக் கடைப்பிடிக்கிறார்கள் போல் தெரிகிறது.

இந்நிலையில் மலையகப் பெண கொழும்பு மருதானைப் பொலிஸாரால் கற்பழிக்கப்பட்ட சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுக்கு எதிர்ப்புத்தெரிவித்து இன்று வடக்குக கிழககில பூரண ஹர்த்தால் அனுஷ்டிககப்படவுள்ளது.

பத்துத் தமிழ்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து நடத்துகின்ற இக் ஹர்த்தாலை தனியே கட்சிகளின் ஏற்பாடெனக் கருதாது தமிழ் பெண்களின் அடிப்படைக கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக - தமிழர்கள் தம் ஒற்றுமையைக் காட்டும் ஹர்த்தாலாகவும், அமைய வேண்டும். இதன் மூலம் தமிழர்களின் உரிமைக்கான ஓர் எழுச்சியாகவும் இது மாறவேண்டும்.

வெள்ளி நற்சிந்தனை

# தீரராய்ச் செய்யும் திருத்தொண்டு கூடச்

# சைவத் தொன்மையைச் சால்புறக் காக்கும்



''கோயில்இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பர். கோயில் இல்லாத இடம் ''அடவி காடு'' என்பது அப்பரடிகளுடைய அருள் வாக்கு கோயில் இருந்தால் மாத்திரம் போதுமா?

பூசைகள், அர்ச்சனை, வழிபாடு, நித்திய நைமித்தியங்கள் ஆகம வழி பேணி நிகழ வேண்டும். அது முட்டுப்படின் மன்னனுக்குத் தீங்கு நிகழும். மழை வளம் குன்றும் நாட்டில் தருமம் நிலைகுளரும். ''முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின் மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றுங், கன்னங் களவு மிகுத்திடுங் காசினி, என்னரு நந்தி எடுத்துரைத் தானே என்பது திருமந்திரம்.

### பயம் வேண்டும்

பயம் என்பது மனிதனுக்குத் தேவை அற்றது என்று சிந்தித்தாலும் 'பயப்பட வேண்டியதற்கும் பயப்படாமை' என்றால் பயம் அர்த்தம் அற்ற ஒரு பதம் ஆகிவிடும். தருமநெறிக்குத் தலை வணங்க வேண்டும் பெரியோரைக் கணம் பண்ண வேண்டும். கடவுள் சந்நிதியைச் சாரும்போது கால்கூச வேண்டும். நெஞ்சம் அஞ்ச வேண்டும்; பக்தி பரவச நிலைபெற வேண்டும் கல்நெஞ்சம் கரைய வேண்டும். இல்லை என்றால் செக்கு என்ன? சிவலிங்கம் என்ன? எல்லாம் ஒன்றுதான் என்ற படுகுழியில் தவறி வழுக்கி விழும் நிலைக்கு ஆளாகிவிடுவோம்.

முன்னையோர் பய பக்தி என்று சும்மாவா சொல்லி

## திருமுறைச்செம்மல்

வைத்தார்கள். பயத்தினால் பக்தியைவித்திட வேண்டும். பின்னர் பத்திவரப் பயம் தானாக வரும். நெருப்புச் சுடும் வரையில் பயம் ஏற்படாது சுட்டபின்னர்நெருப்பைத் தீண்டினால் சுடும் என்ற பயம்வரத்தானே செய்யும்.

பயப்பட வேண்டியதற்கும் பயம் வராதிருந்தால், செய்யத்தகாத தவறுகளைச்செய்தால் தண்டனை கிடைக்கும் என்ற எண்ணத்தினாலும் பயத்தை வளர்த்துக்கொள்ளலாம். அந்த ஆரம்ப நிலை பின்னர் உள்ளப் பண்பாக உருவெடுக்கும். சைவ வாழ்வில் தவிர்க்கப்பட்ட தவறுகளைத் தமதாக்கிக் கொண்டால் தண்டனை கிடைக்கும் என்ற அச்சத்தைப் பெரிய புராணத்தில் காணலாம்.

### சிவனடியார்கள்

விறன்மிண்ட நாயனார் தாம் செல்லும் இடங்கள் தோறும் அடியார்களுடைய திண்மை ஒழுக்கத்தைச் செயற்படுத்துவார். திருக்கோயிலுக்குச் சிவபெருமானை வணங்கச் செல்லும் போது சிவனடியார்களை முன்பு வணங்க வேண்டும். அதன் பின்னரே சிவபெருமானை வணங்க வேண்டும் என்னும் கருத்தை அடியார்களுக்கு வலியுறுத்தினார். திருவாரூரில் திருக்கூட்டத்தவரைப் புறக்கணித்துச் சிவபெருமானை வணங்கச் சென்ற சுந்தரமூர்த்தி நாயனாரைப் பார்த்தார். திருக்கூட்டத்தவரை வணங்காத நம்பியாரூரனும் புறகு, சிவபிரானும் புறகு என்று எடுத்தியம்பினார்.

''அடியார் உடன் நாம் உளோம்'' என்ற இறைவன் வாக்கைப் பெற்றார். உலகிற்குத் திருத்தொண்டத்தொகை கிடைக்கக் காரணரானார் 'அடியார்க்கு அடியான் ஆரூரன்' என்று பாடினார் நம்பியாரூரர்.

### வன்றொண்டர்கள்

எறிபத்தர் அடியார்க்கு அடாதன அடுத்தபோது அஞ்சாமல் தோன்றி இடர்களைவார். அது அவர்சிவதொண்டு வேதம் போற்றும் பரசு கையில் பற்றுவார். அச்சம் தாயின் - தலையாய அன்பின் முன் நில்லாதது போல, மண்மேல் அடியார்க்கு உற்ற விடத்து முன் சென்று அப்பணி புரிவார்.

சண்டேசுர நாயனார் திருமஞ்சனக் குடப்பாலைக் காலால் இடறிச் சிந்தியவன் தந்தையாம் எச்சதத்தன் என்று அறிந்தார். சிவகருமம் சிதைத்தவன் தாளை விழ எறிவது பாதகத்திற்குத் தக்க பரிசு எனக் கண்டார் பக்தி முதிர்ந்த பாலகனார்.

சிவனடியார்களை இகழ்ந்து உரைக்க வைத்த நாவை வலித்து அரியும் சக்தியால் சத்தியார் என்னும் நாமம் தாங்கினார் நாயனார்.

சிவபிரான் திருமுடியில் சாத்தும் மலரை எடுத்து மோந்தார் என்று, பட்டத்து அரசி என்றும் பாராமல் மூக்கை அரிந்தார் செருத்துணையார். மூக்கு மோப்பதற்குக் கை அல்லவா உதவியது. முதலில் கையை அல்லவா தடிய வேண்டும் என்று கழற்சிங்க நாயனார் அரசியின் கையைத் தடிந்தார்.

சிவபெருமானுடைய அமுதுபடிக்கான நெல்லை உண்ட கிளையை வாளொடு துணித்தார் கோட்புலி நாயனார்.

இவற்றால் சிவநெறியை உயிரினும் மேலாக ஓம்பிய உயர்வையும் அருநெறியை உலகில் நிலவச் செய்த நேர்மையையும் உற்று நோக்கின் சிவவழிபாட்டின் பயபத்தியை உணரலாம்.

# யாழ். அ.ம.தி. களிற்குப் பெருமகிழ்வூட்டும்

# பேரருட்திரு உ வில்செய்ம் ஸ்ரெக்ளிங் வருகை

போர்த்துக்கேயரின் வருகையோடு ஈழநாட்டில் கிறிஸ்தவம் அரும்பு ஆரம்பித்தது. அதாவது 1505 லிருந்து கத்தோலிக்க விசுவாசம் வேரூன்றலாயிற்று. போர்த்துக்கேயரின் ஆட்சி வீழ்ச்சியுற்று ஒல்லாந்தரின் ஆட்சி(1658-1798) நிலைநிறுத்தப் பெற்றபோது கத்தோலிக்க விசுவாசம்மந்தகதியிலேயே வளர்ச்சி பெறலாயிற்று, இக்காலப் பகுதியிலேதான். முத்திப்பேறு பெற்ற யோசேவ்வாஸ்முனிவர் வண கொண்சால்வேஸ் போன்ற ஒறற்றோறியன் சபையைச் சேர்ந்த அருட்பணியாளர்கள் ஈழநாட்டின்கத்தோலிக்க விசுவாசம் மீண்டும் உயிர் பெறக் காரணராய் இருந்தவர்களாவர்.

### பதிலாயர் பெற்றாக்கினி

கத்தோலிக்க விசுவாசம் தன்னை வளர்த்துக்கொண்டு வரும் நிலையில் 1848இல்வட பகுதியின், யாழ். மன்னார் திருமலை, மட்டக்களப்பு, சிலாபம், அனுராதபுரம் ஆகிய மறை மாவட்டங்கள உட்பட நீர்கொழும்புப் பிரதேசத்தையும் உள்ளடக்கிய பகுதியின் அப்போஸ்தல பதிலாயராய் இருந்த பெற்றாக்கினி தமது பகுதியில் பணிபுரிய அருட்பணியாளர்களைத் தேடி ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றாக அலைந்து திரிந்தார் ஏனெனில் அக்காலத்தில் சுதேச இறையழைத்தல்கள் இல்லை.

பிரான்சியப் புரட்சியின் போது அழிந்து போன தேசத்தைமீண்டும் உருவாக்க ஆயர் இயூஜின் டிமசனொட் 1816 இல் அமல மரித்தியாகிகள் என்ற அப்போஸ்தல குழுமத்தை உருவாக்கி இருந்தார். இந்த அ.ம.தி. கள் பிரான்சு தேசத்தைச் சேர்ந்தவர்களாயினும் தமது தேசத்தைக் கடந்தும் மறைபரப்புப் பணியாற்ற அழைப்புக்களைப் பெற்ற வண்ணமிருந்தனர்.

## செ. அன்புராசா அ.ம.தி

### அருட்பணியாளர் வருகை

இந்த வேளையிலே தான், வடபகுதியின் பதிலாயர் பெற்றாக்கினி தம்முடைய மக்களுக்குப் பணியாற்ற அருட்பணியாளர்களைத் தந்துதவுமாறு ஆயர் இயூஜின் டிமசனொட்டை வேண்டினார்.

ஏழைகளுக்குப் பணிபுரிய என்றால் ஆயர் இயூஜின் டிமசனொட் இல்லையென்று சொல்லமாட்டார். என்ற இரகசியத்தை பதிலாயர் பெற்றாக்கினி அறிந்து வைத்திருந்ததில் வியபபில்லை. காரணம், எப்படியாவது அருட்பணியாளர்களைக் கொண்டுவர வேண்டும்! பதிலாயர் பெற்றாக்கினியின் முயற்சியாலும் ஆயர் இயூஜின் டிமசனொட்டின் தாராள சிந்தையாலும் 1848 கார்த்திகைத் திங்கள் அருட்திரு சமேரியா அடிகளின் தலைமையில் நான்கு அமல மரித்தியாகிகள் ஈழநாட்டில் காலடி எடுத்து வைத்தனர்.

### உள்ளூரில் இறையழைத்தல்

பங்குமேய்ப்புப் பணிகளோடுஆரம்பமாகியஅ.ம.தி. களின் கல்விப்பணி, மனிதநேயப்பணி, சமூகப் பணி என்று விரிவடைந்தது. ஆரம்பத்தில் பிரான்சு, இத்தாலி, ஜேர்மனி, ஸ்பெயின், பெல்ஜியம், ஒல்லாந்து, போலந்து, இங்கிலாந்து, அயர்லாந்து, செக்கோசிலியா போன்ற நாடுகளிலிருந்து அருட்பணியாளர்கள்ஈழநாட்டிற்கு வந்தனர். நாளடைவில் உள்ளூரில் இறையழைத்தலை ஊக்குவித்து வளர்த்தெடுப்பதில் மிகவும் அக்கறை காட்டினர். இப்பணியில் அ.ம.தி. கள் ஆர்வத்தோடு ஈடுபட்டுப் பணியாற்றிய தன் பலனும், பயனும் தான் இன்று நாம் காண்கிற சுதேச இறையழைத்தலின் உருவாக்கமும் அதன் அறுவடையுமாகும். அருட்பணியாளர்களை உருவாக்கும்ஈழத்தின் முதலாவது குருமடமாகிய புனித மார்ட்டீனார் குருமடம் அ.ம.தி. களால் 1869 இல் நிறுவப்பட்டது.

இல்லத்தரிசிப்புக்கள், மகா ஞான ஒடுக்கம் நடத்துதல், கோயில்திரு நாட்காலங்களில் மறையுரையாற்றுதல், தவக்கால தியானங்கள நடத்துதல் மரியன்னை பக்தி போன்றன இன்னும் அ.ம.தி. களின்விசுவாச வாழ்வோடு சேர்ந்து விட்டவையாகத் திகழ்கின்றன: கல்லூரிகளையும், தொழில் நிறுவனங்களையும், பயிற்சிச் சாலைகளையும் அமைத்து மக்களுக்குக் கல்வியையும் தொழில்வாய்ப்புக்களையும் ஏற்படுத்தினர். ஆதரவற்ற சிறார்களைப் பராமரித்துப் புகலிடம்அளித்தனர். மேற் சொன்ன பணிகளோடு புதிய தேவைகளை இனம் கண்டு, உளவள ஆற்றுப்படுத்துதல், ஆன்மீக நெறிப்படுத்துதல், வைத்தியசாலை ஆன்மீகப்பணி, இடம்பெயர்ந்தோருக்கான பணி என அ.ம.தி களின் பணிக்களம் பரந்து விரிந்து ஸ்தாபகர்த் தந்தை புனித இயூஜின்டிமசனொட்டின் அருங்கொடையும் அ.ம.தி. களின் உள்ளுயிருமாகிய 'ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க' என்பது தொடர்ந்து இக்குழுமத்தின் பணிகளிலே முதன் நிலை பெறுகிறது.

சுமார் 153 ஆண்டுகளாக ஈழத்து அ.ம.தி. களின் வரலாற்றில் ஆயர் பொஞ்ஜின், அருட்தந்தையர்களானலோங்சாளஸ், மத்தியூஸ் போன்றவர்கள் ஆற்றிய கல்விப்பணியையும், மனித நேயப்பணிகளையும், சமூகப்பணிகளையும் கல்வியுலகம்மறந்துபோக முடியாது. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் ஆற்றிய

(2.ம் பக்கம் பார்க்க)

வடக்கு- கிழக்கில் ★ 1000 பட்டதாரிகள் ★ 1000 தொண்டராசிரியர் உட்பட

# மூவாயிரம் பேருக்கு விரைவில் ஆசிரியர் நியமனம்

# தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் அமைச்சர் உறுதி

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கில் விரைவில் மூவாயிரம் ஆசிரியர் நியமனங்கள் வழங்க கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜயந்த இணக்கம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கல்வி அமைச்சு அலுவலகத்தில் தமிழர் ஆசிரியர் சங்கத்தூதுக்குழுவினருடன் இடம்பெற்ற சந்திப்பில் கல்விஅமைச்சர் இவ்விணக்கத்தைவெளியிட்டார்.

இச்சந்திப்பில் கல்வி அமைச்சின் வடக்கு- கிழக்குமாகாண ஆளுநர், அமைச்சின் மேலதிக செயலாளர், கல்விச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தென்னக்கோன் வடக்கு- கிழக்குமாகாணகல்விச்அமைச்சின் செயலாளர் க பரமேஸ்வரன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தன், மாகாணக் கல்வி அமைச்சின் திட்டமிடல் கல்விப் பணிப்பாளர் நவரட்ணராஜா, ஆகியோர் பங்கு கொண்டனர்.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் தலைவர் தண்டாயுதபாணி தலைமையிலான சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளவர்களில் ஆயிரம் பேர் ஏற்கனவே நேர்முகத் தேர்வு நடத்தப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் எனவும்.

வேலையற்றிருக்கும் பட்டதாரிகளில் இருந்து ஆயிரம்பேருக்கும் மீதி ஆயிரம்பேர் திறமையடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டும் ஆசிரியர் நியமனம் வழங்கப் படும். எனவும் கல்வியமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை இச்சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் மகாசிவம் 'வலம்புரிக்கு' தெரிவிக்கையில் தொண்டர் ஆசிரியர் நேர்முகத்தேர்வுவிபரங்கள் கல்விச்சேவை ஆணைக்குழுவிக்கு அனுப்பி வைக்கப்பட்டு மூன்றாம் தவணை ஆரம்பத்தில் நியமனங்கள் வழங்கப்படுமெனத் தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பில் முன்பு ரத்துச்செய்யப்பட்ட 39 உதவிக்கல்விப்பணிப்பாளர்களின் நிரந்தர நியமனத்துக்கும் அங்கீகாரம் வழங்குவதெனஉறுதியளிக்கப் பட்டது [உ]

## வன்னிப்பெருநிலப் பரப்பில்

# எழுச்சியுடன் நடந்த கரும்புலிகள் தினம்

(வவுனியா)

வடக்கு கிழக்குப் பகுதிகளில் கரும்புலிகள் தினம் நேற்று எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப பகுதியில் நேற்றுக் காலை 9 மணிக்கு கரும்புலிகள் தினம் எழுச்சியுடன் ஆரம்பமானது தமிழீழ தேசியக்கொடி ஏற்றப்பட்டு. கரும்புலிகளின் திருவுருவப் படங்களுக்கு ஈகைச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

கரும்புலிகளின் திருவுருவப்படங்கள வைக்கப்பட்ட விசேட பந்தல்கள் போராளிகளின் பாசறைகள். பொது நிலையங்கள். பாடசாலைகள மற்றும முக்கிய சந்திகள் வீதிகளில் சிவப்பு பஞ்சள் கறுப்பு மற்றும் நீறநிறக் கொடிகளால் அலங்கரிக்கப் பட்ட அலங்கார வளைவுகளும் வைக்கப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள விசுவமடு.முள்ளியவளை .கிளிநொச்சி புதுக்குடியிருப்பு மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில கரும்புலிகள் நிகழ்வு எழுச்சியோடு இடம் பெற்றதுடன மாவீரர்களின் பெற்றோர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கரும்புலிகள் தினம் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டதுடன் கொக்கட்டிச் சோலையில் நேற்று மாலை பொதுக்கூட்டமும் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றது.

இதேவேளை யாழ் குடாநாட்டில் பல்வேறு பகுதிகளில் கரும்புலிகளை நினைவு கூறும் வகையில் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்தன. (இ)

## நன்றி நவிலல்

04-07-2001 அன்று நடைபெற்ற எனது அன்புச் சகோதரி [சி. கனகம்சௌந்தரி] யின் இறுதிக் கிரியைகளில் நேரிலும், தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் மூலமும் மற்றும் மலர்வளையங்கள் வைத்தும் தமது அனுதாபங்களைத் தெரிவித்து எமது துக்கத்தில் பங்கு கொண்ட,

மேன்மை தங்கிய ஜனாதிபதி, கௌரவ அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநகர, பிரதேச சபைத் தலைவர்கள, உறுப்பினர்கள், அலுவலர்கள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள, வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள அமைச்சினதும் அமைச்சின் ஏனைய நிறுவனங்களினதும் அதிகாரிகள், ஊழியர்கள அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் திணைக்கள அதிகாரிகள், மற்றும் 51வது படையணியின் தளபதி, யாழ் பொலிஸ் அத்தியட்சகர், யாழ் தலைமைக் காரியாலய பொலிஸ் அதிகாரி, உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொண்டுதவிய பொலிஸ், இராணுவ உத்தியோகஸ்தர்களுக்கும், அந்தியகால சேவையினருக்கும மற்றும சகல வழிகளிலும ஒத்துழைப்பும், உதவியும் வழங்கிய அனைவருக்கும், எமது குடும்பத்தின் சார்பில் எனது நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தகவல்:
சி. தவராசா, (சகோதரன்)
(பாராளுமன்ற உறுப்பினர்)

(கி-2184)

## பிரதமர் இன்று விளக்கமளிப்பார்

(கொழும்பு)

அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படமாட்டாது. இது தொடர்பாக பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா இன்று பாராளுமன்றத்தில் விளக்கமளிக்கவுள்ளளார்.

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாகவும், அதற்குரிய மாற்று வழிகள் பற்றியும் விளக்கமளிக்கவுள்ளதாகவும் தெரியவருகிறது. [வ]

## நெல்லியடியில் கிரனேற் வீச்சு

நெல்லியடிச் சந்தியில் நேற்றிரவு 8 45 மணியளவில் கிரனேற் வீச்சுச் சம்பவமொன்று இடம்பெற்றது இதன்போது ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை (ந)

### இன்று...

[வரதரணி], மற்றும் பல்வேறு பொது அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்துள்ளன.

இன்று அனுஷ்டிக்கப்படவுள்ள ஹர்த்தாலின் போது தமிழ்மக்கள் அனைவரும் வீடுகளிலஇருந்தவாறே அமைதியான முறையில் பிரார்த்தனையில் ஈடுபடுமாறும், பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாமலும் அரச, கூட்டுறவு, கூட்டுத்தாபன ஊழியர்கள் தத்தம் கடமைகளுக்குச் செல்லாமலும் ஹர்த்தாலை அனுஷ்டிககுமாறு பத்துத் தமிழக கட்சிகளும் கூட்டாக வேண்டுகோள விடுத்துள்ளன; [ம]

### திவ்வியனை . . .

செய்யவில்லையானால் மாணவர் மத்தியில் இன்று கொதித்தெழுந்துள்ள எதிர்ப்புணர்வு குடாநாடு தழுவியதாக மாறும் என மாணவர்கள் அவ்வறிக்கை மூலம் எச்சரித்துள்ளனர். (இ)

### யாழ் . . .

காதே' , மாணவர்களைக் கைது செய்து புலி முத்திரை குத்தாதே,' அடாவடித்தனம் தொடர்ந்தால் பொங்கி எழுவோம்' ஆகிய வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளைத் தாங்கியிருந்தனர்.

அத்துடன் தமது பகிஷ்கரிப்பு போராட்டம தொடர்பாக மாணவர்கள் 'இனவாதப்பிசாசின்இன்னுமொரு அரக்கத்தனம்' எனும தலைப்பில் துண்டுப்பிரசுரமொன்றையும்வெளியிட்டுள்ளது. (இ)

### ரணிலை . . .

விதிக்காமல் பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் விடுதலைப்புலிகள் நிபந்தனைகளை விதித்தால் பேச்சுவார்த்தை ஒருபோதும் நடைபெறமாட்டாதுஎன்றும் தெரிவித்தார். (வ)

### கொழும்பில் . . .

ஹேமஸ்ரீ ஹெட்டியாராட்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள விடுதிகள் மற்றும் வீடுகளில் மேற்கொண்ட தேடுதல்களில் கைது செய்யப்பட்டவர்களிடம் அடையாள அட்டை மற்றும் அனுமதிப் பத்திரம் ஆகியவை காணப்படவில்லை என்று பொலிஸ் பொறுப்பதிகாரி ஹேமஸ்ரீ மேலும் தெரிவித்துள்ளார்.

கைதானவர்கள் மீதான விசாரணைகள் நடைபெறுவதாகவும் இதுவரை எவரும் விடுதலை செய்யப்படவில்லை எனவும் தெரியவருகிறது. (இ)

### நாடு தழுவிய . . .

தொடர்ந்துரையாற்றுகையில், அச்சம் காரணமாகவே அரசாங்கம் அவசரகாலசட்ட நீடிப்பு பிரேரணையை சமர்ப்பிக்கவில்லை. நம்பிக்கையில்லா பிரேரணையையும் அரசு மேலும் காலதாமதம் செய்து வருகிறது. இதனை நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்று அவர் தெரிவித்துள்ளார். [வ]

பாலியல் வல்லுறவை

## கண்டித்து அறிக்கை

மருதானைச் சோதனைச் சாவடியில் இளம்பெண் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளான சம்பவத்தை ஈ.பி.டி.பி வன்மையாக கண்டிக்கிறது.

சட்டம் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பைஉறுதிப்படுத்தும் பொறுப்புள்ள ஒருசிலர் இக்கொடூரமான செயலுக்குகாரணமாகஇருப்பதுவன்மையாக கண்டனத்திற்குரியது. இத்தகைய பாலியற் கொடூரங்கள் தொடராமல் தடுக்கஆக்கபூர்வமான செயற்பாட்டில ஈடுபடுவதே முதன்மையானது

இவ்வாறு வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள அறிக்கையொன்றில்தெரிவித்துள்ளார்.

பெண்கள் மீதான பாலியல் பலாத்காரங்களை எவரும் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. இத்தகைய கொடூரங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டியது மிக அவசியமானது.

அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட விரும்பும் அனைவரும்சகலவிதமான அச்சுறுத்தல்களையும் ஒரே விதமாகக் கண்டிக்க முன்வர வேண்டும்

ஆயுதங்கள் மூலம் ஜனநாயகம அச்சுறுத்தப் படுவது நிறுத்தப்படுவதுடன்பாலியற் பலாத்காரங்கள் இனியும் இடம்பெறக் கூடாதென அனைத்து தமிழ் பேசும் மக்களும் குரல் கொடுக்க வேண்டுமென்றும் அமைச்சர் தேவானந்தா மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். [இ)

### வாசகர்களுக்கு

குருஷேத்திரம் வழமைபோல்திங்கள் வெளிவரும். (ஆ-ர்)

### புலிகள் மீதான . . .

ளைப் பிரகடனம் செய்யப் பட்டுள்ளன. இச் சட்டத்தின் 12வது பிரிவிற்கு அமையசகல நிர்வாக மாவட்டங்களிலும் அமைதியைப் பேணும் பொருட்டு முப் படையினரையும் தேவை ஏற்படும் போது சேவையில் ஈடுபடுத்துவதற்கும் அத்தியாவசிய சேவைகளை நடத்துவதற்குமென ஜனாதிபதி இந்த உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம் ஒரு பிரதேசத்தில் திட்ட மிட்ட முறையில் வன்முறைகள் பற்றிய அச்சம் நிலவுகின்றது என்று அடிப்படையில் இத்தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுள்ளது

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த உத்தரவுகள யாவும் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது. இதுஇவ்வாறுஇருக்க ஏதாவது ஒருசேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதுவிசேடவர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனம் செய்யப் படுமென பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (வ)

★ மங்காத அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு ★

நியூ ராதிகாஸ் நகை மாளிகை

189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை "வலம்புரி" அச்சோ இகாபனத்தாரால் இல: 18, வெள்ளாறுதெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூலை மாதம் 06-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.